UNIVERSITY OF MORATUWA LIBRARY SRI LANKA

## இரண்டாம் பகுதி

# மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்


| | பக்கம் |
|---|---|
| கணக்குகள் | i |
| வெளிநாட்டுச் செலாவணி | iv |
| உள்நாட்டு வங்கித்தொழில் | v |
| நாணய வெளியீடு | vii |
| வங்கித்தொழில் அபிவிருத்தி | vii |
| வங்கி மேற்பார்வை | ix |
| அபிவிருத்தி நிதி | ix |
| கிராமியக் கொடுகடன் | xv |
| கிராமிய வங்கித் தொழிலும் அலுவலர் பயிற்சியும் | xx |
| பொருளாதார ஆராய்ச்சி | xx |
| புள்ளிவிபரவியல் | xxii |
| பொதுப்படுகடன் | xxiii |
| செலாவணிக் கட்டுப்பாடு | xxx |
| ஊழியர் சேமநிதியம் | xxxi |
| பணியாளரகம் | xxxv |
| தரவு செய்முறைப்படுத்தல் | xxxv |
| பணிமனை | xxxvi |
| தகவல் | xxxvi |
| செயலகம் | xxxvii |
| முகாமைக் கணக்காய்வு | xxxvii |
| பிராந்திய அலுவலகம் - மாத்தறை | xxxvii |
| ஆளணி | xL |

# மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

## கணக்குகள்

1981 திசெம்பர் 31இல் உள்ளவாறான மத்திய வங்கியின் ஐந்தொகையும், 1981 திசெம்பர் 31உடன் முடிவடைந்த இலாப நட்டக் கணக்கும் அட்டவணை 2.1 இல் காட்டப்பட்டுள்ளன.

மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள் 1980 திசெம்பர் 31இன் ரூபா 22,831,653,904 உடனொப்பிடுகையில் 1981 திசெம்பர் 31இல் ரூ.27,351,805,694 ஆக விளங்கியது. ரூ.4,520,151,790 கொண்ட இவ்வதிகரிப்புக்கு ''பன்னாட்டு ஒதுக்கிலும்'' உள்நாட்டுச் சொத்துக்களிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களே காரணமாகும். ''பன்னாட்டு ஒதுக்கு'' 1980 திசெம்பர் 31இல் ரூ. 4,404,286,904 இலிருந்து 1981 திசெம்பர் 31இல் ரூ. 6,666,756,907 ஆக ரூ. 2,262,470,003 அதிகரிப்பைக் கொண்டிருந்த வேளையில் ''உள்நாட்டுச் சொத்துக்கள்'' ரூ.3,423,286,668 ஆல் அதிகரித்து 1980 திசெம்பர் 31இன் ரூ .12,199,446,333இலிருந்து 1981திசெம்பர் 31இல்ரூ.15,622,733,001ஆக விளங்கின. ''ஏனைய சொத்துக்களினதும் கணக்குகளினதும் ''மொத்தம் ரூ.1,165,604,881ஆல் 1980திசெம்பர் 31இன் ரூ.6,227,920.667 இலிருந்து 1981 திசெம்பர் 31இல் ரூ.5,062,315,786ஆக வீழ்ச்சியடைந்தது.

மீளாய்வின் கீழான காலப் பகுதியில் வங்கியின் பொறுப்புக்களிலேற்பட்ட ரூ. 3,628,053,176 இலட்ச அதிகரிப்புக்கு வைப்புக்களில் ரூ. 5,342,535,514 இலிருந்து ரூ. 8,970,588, 90இற்கு அதிகரித்தமையே காரணமாகும். சுற்றோட்டத்திலுள்ள நாணயம் ரூ. 633,981,121 ஆல் ரூ. 5,009,516,039 இலிருந்து ரூ. 5,643,497,160 ஆகவும் ஏனைய பொறுப்புக்கள் ரூ. 418,804,672ஆல் ரூ. 11,336,040,572 இலிருந்து ரூ. 11,754,845,244 ஆகவும் அதிகரித்தது.

1981ம் ஆண்டுக்கான வங்கியின் வருமானம், முன்னைய ஆண்டின் வருமானமான ரூ. 2,602,098,160 உடனொப்பிடுகையில் ரூ. 2,193,579,293 ஆக விளங்கி ரூ. 408,518,867 கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது. ஒதுக்குக் கணக்குகளுக்கான செலவின ஒதுக்கங்களும், பெறுமானத் தேய்வுக்கான ஒதுக்கங்களும் ரூ. 2,169,783,959 ஆக விளங்கின. நாணய சீராக்கக் கணக்கின் பற்றில் நிலுவையாகவிருக்கும் ரூ. 22,795,334 கொண்ட தொகை, நாணயச் சட்ட விதியின் பிரிவு 39(அ) இன் நியதிகளின்படி வங்கியின் வருமானத்திற்கெதிராக தீர்க்கப்பட்டது. வங்கியின் தேறிய இலாபமான ரூ. 10 இலட்சங் கொண்ட தொகை மிகையாகக் கருதப்பட்டது.

## 1981 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் நாளில்

ஐந்தொகை — 1981ஆம் ஆண்டு திசெம்பர்

| 1980 திசெம்பர் 31 ரூபா | 1980 திசெம்பர் 31 ரூபா | பொறுப்புக்கள் | 1981 திசெம்பர் 31 ரூபா | 1981 திசெம்பர் 31 ரூபா |
|---|---|---|---|---|
| | | **மூலதனக் கணக்கு** | | |
| 15,000,000 | | முதல் ... . ... ... | 15,000,000 | |
| 65,000,000 | 80,000,000 | மிகை ... .. .. ... | 66,000,000 | 81,000,000 |
| | | **சுற்றோட்டத்திலுள்ள நாணயம்** | | |
| 4,807,602,981 | | சுற்றோட்டத்திலுள்ள தாள் நாணயங்கள் .. | 5,412,425,674 | |
| 201,913,058 | 5,009,516,039 | சுற்றோட்டத்திலுள்ள குத்தி நாணயங்கள் ... | 231,071,486 | 5,643,497,160 |
| | | **வைப்புக்கள்** | | |
| 1,345,800,620 | | அரசு ... ... ... | 1,440,737,041 | |
| 13,211,080 | | அரச முகவர் நிலையங்களும் அரச நிறுவனங்களும் | 15,540,643 | |
| 1,263,674,391 | | வர்த்தக வங்கிகள் ... ... ... | 1,846,342,353 | |
| 2,373,949,480 | | பன்னாட்டு அமைப்புக்கள், வெளிநாட்டு அரசு, வெளிநாட்டு வங்கி நிறுவனங்கள் ... | 5,350,691,097 | |
| 85,458 | | திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்ட ரூ. 120,546,500/- கொண்ட தொகையை நீக்கிய கட்டாய சேமிப்பு நிதி ... ... | 306,073 | |
| 345,814,485 | 5,342,535,514 | ஏனையவை ... ... ... | 316,971,483 | 8,970,588,690 |
| | 428,561,779 | வெளிநாடுகளிலிருந்து பெற்ற கடன்பாடுகள் ... | | 266,874,600 |
| | 525,000,000 | நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியம் ... | | 525,000,000 |
| | 110,000,000 | மூலதன உதவுதொகைக் கணக்கு ... | | 110,000,000 |
| | 11,336,040,572 | ஏனைய பொறுப்புக்களும், கணக்குகளும் ... | | 11,754,845,244 |
| | 22,831,653,904 | | | 27,351,805,694 |

### 1981 திசெம்பர் 31ஆம் நாள்

| ரூபா | | | ரூபா |
|---|---|---|---|
| 2,601,098,160 | பொதுச் செலவுகளுக்கும் (சம்பளங்களையும், தாள் நாணயங்கள், குத்திகள் மீதான செலவையும், காணியும் கட்டடத்தினதும், அலுவலகத் தளபாடங்களினதும் மீதான பெறுமானத் தேய்வையும், உள்ளடக்கும்) நாணயச் சட்டத்தின் 38ஆம் பிரிவின் நியதிகளின்படி செய்யப்பட்ட ஒதுக்குகளுக்கும். | | 2,169,783,959 |
| | **1981 திசெம்பர் 31 உடன் முடிவுற்ற ஆண்டுக்கான தேறிய இலாபம்** | | |
| | நாணய சீராக்கக் கணக்கிற்கு - நாணய விதிச் சட்டத்தின் 39(அ) பிரிவின் நியதிகளின் கீழ் தீர்த்துக்கட்டிய நிலுவை. | 22,795,334 | |
| 1,000,000 | நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (ஆ) இன்படி தேறிய இலாபம் மிகைக்குக் கொண்டுசெல்லப்பட்டது. | 1,000,000 | 23,795,334 |
| 2,602,098,160 | | | 2,193,579,293 |

அட்டவணை 2.1

# உள்ளவாறு இலங்கை மத்திய வங்கியின் கணக்குகள்

## 31ஆம் நாளில் உள்ளபடி

| 1980 திசெம்பர் 31 | | சொத்துக்கள் | 1981 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
| | | **பன்னாட்டு ஒதுக்கு** | | |
| 3,937,419,823 | | இலங்கைக்கு வெளியே உள்ள பணங்களும், நிலு வைகளும் | 5,591,108,534 | |
| 466,867,081 | | *வெளிநாட்டுப் பிணைகளும் திறைசேரி உண்டியல்களும் ... | 638,648,498 | |
| — | 4,404,286,904 | சிறப்பு எடுப்பனவு உரிமை உடைமைகள் ... ... | 436,999,875 | 6,666,756,907 |
| | | **உள்நாட்டுச் சொத்துக்கள்** | | |
| | | கடன்களும் முற்பணங்களும் | | |
| 1,627,637,810 | | அரசிற்கு ... ... ... | 1,536,437,811 | |
| 210,131,641 | | ஏனையவற்றிற்கு – நடுத்தர நீண்டகால | 411,362,446 | |
| 913,769,800 | | குறுங்கால ... | 996,921,098 | |
| 9,337,907,082 | | அரச, அரச உத்தரவாதப் பிணைகள் ... ... | 12,568,011,646 | |
| 110.000,000 | 12,199,446,333 | நிதி, ஏனைய நிறுவனங்களுக்கான உதவு தொகைகள் ... | 110,000,000 | 15,622,733,001 |
| | 6,227,920,667 | ஏனைய சொத்துக்களும், கணக்குகளும் ... ... | | 5,062,315,786 |
| | | *அரசநிறுவனங்களிலிருந்து 1964 பெப்புருவரி 1இல் ரூபா 5,441,169/- முகப்புப் பெறுமானத்திலும், 1965 மே 24இல் ரூ.57,450/-முகப்புப் பெறுமானத்திலும் பெற்ற பிணைகளை உள்ளடக்கும். (இப்பிணைகளின் மதிப்பிடப்பட்ட சந்தைப் பெறுமானங்கள், மேற்குறித்த நாட்களில் முறையே, ரூ.2,867,960/- ஆகவும், ரூ. 34,340/- ஆகவும் இருந்தன) | | |
| | 22,831,653,904 | | | 27,351,805,694 |

## முடிவுற்ற ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு

| | ரூபா | | ரூபா |
|---|---|---|---|
| | 2,602,098,160 | வட்டி, ஏனையவை ... ... ... | 2,193,579,293 |
| | 2,602,098,160 | | 2,193,579,293 |

**டபிள்யூ. இராசபுத்திரம்**
ஆளுநர்

**எச். பிரேமரட்ன**
முதன்மைக் கணக்காளர்

1981ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆம் நாள் முடிவுற்ற மத்திய வங்கியின் கணக்குகள் இலங்கை அரசியல் அமைப்பின் பிரிவு 154 (1) இற்கு அமையவும், 1971இன் எண் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் பிரிவு 13 (1) இற்கு ஏற்பவும் நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 42(1) இற்கு ஏற்பவும் எனது பணிப்புரிமையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 42 (2)இன் நியதிகளுக்கேற்ப நிதியமைச்சருக்கு ஒப்படைக்க வேண்டிய எனது அறிக்கை உரிய காலத்தில் ஒப்படைக்கப்படும்.

கணக்காய்வு அலுவலகம்,
கொழும்பு-7.
1982, ஏப்பிறல் 9

**பி. எம். டபிள்யூ. விஜயசூரிய**
கணக்காய்வாளர் நாயகம்

## வெளிநாட்டுச் செலாவணி

ஐ. அ. டொலர்கள், ஸ்ரேலிங் பவுண், டியூச்மாக், பிரான்சிய பிராங்கு யப்பானிய யென், இந்திய ரூபாய் ஆகிய ஆறு நாணயங்களின் தந்தி மாற்றல்களுக்கான அலுவல் சார்புடைய செலாவணி வீதங்களை வங்கி தொடர்ந்தும் ஒவ்வொரு வேலை நாளிலும் தீர்மானம் செய்கிறது. இந் நாணயங்களுக்கான செலாவணி வீதங்கள் 1981இன் இறுதியிலுள்ளவாறு அட்டவணை 2-2 இல் கொடுக்கப்பட்டுள்ளன. வங்கி, வர்த்தக வங்கிகளுடன் தனது நடவடிக்கைகளை தொடர்ந்தும் வெளிநாட்டு நாணயத்தாள்களிலேயே வைத்திருந்தது.

அட்டவணை 2.2

செலாவணி வீதங்கள்

| நாணயம் 100 அலகுகட்கு | 1981 இறுதியிலிருந்த நடுத்தர வீதம் |
|---|---|
| ஐ. அ. டொலர் ... ... | 2,055.00 |
| பவுண் ஸ்டேர்லிங் ... ... | 3,890.10 |
| டியூச் மார்க்கு ... ... | 904.30 |
| பிரான்சிய பிராங்கு ... ... | 357.40 |
| யப்பானிய யென் ... ... | 9.2605 |
| இந்தியா ரூபாய் ... ... | 220.63 |

## ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்

மீளாய்வின் கீழான காலப் பகுதியில் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய வசதியினூடாக மத்திய வங்கியினால் மேற் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி முன்னைய ஆண்டில் ரூ.31,877 இலட்சத்திற்கு வகைகூறிய மொத்தத்துடனொப்பிடுகையில் ரூ. 43,562 இலட்சமாக விளங்கியது. 1975 இல் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் தொடங்கப்பட்டதிலிருந்து இரு மாதங்களுக்கொரு முறை மேற்கொள்ளப்படும் நிலுவைகளின் தீர்ப்பனவு இலங்கைக்குச் சாதகமாக அமைந்தது, 1981ம் ஆண்டில் மட்டுமேயாகும். மீளாய்வின் கீழான ஆண்டில் தேறிய வரவுகள் ரூ. 7,402 இலட்சமாயிருக்க, 1980இல் தேறிய கொடுப்பனவுகள் ரூ. 6,751 இலட்சமாகக் காணப்பட்டன.

## இந்தியாவுக்கு குடிபெயர்ந்து செல்வோருக்கான உதவு தொகையும் வெகுமதிக் கொடுப்பனவும்

1964 இல் இந்திய — இலங்கை உடன் படிக்கையின் கீழ் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களை மீள அனுப்புதலை விரைவுபடுத்துவதற்காக அரசின் சார்பில் வங்கி இரு திட்டங்களைத் தொடர்ந்தும் தொழிற்படுத்துகிறது. இவை (1) இந்தியாவுக்கு திரும்பிச் செல்வோருக்குஒப்புதலளிக்கப்பட்ட தொகையின் 65சத வீதத்துக்குச் சமமான ஒரு தொகை அல்லது அத்தகையோருக்குச் செலுத்தப்பட்ட அத்தொகையின் ஒரு பகுதி என்ற நியதியிலமைந்த உதவு தொகைத் திட்டமும்.

(2) வெகுமதிக்கொடுப்பனவான ரூ. 500 உம் இத்தொகையில் இத்தொழிலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு ஊக்குவிப்பாகக் கொடுக்கப்பட்ட 65சத வீதமுமாகும். வங்கி இவ்விரு திட்டங்களையும் வர்த்தக வங்கிகளுக்கூடாகவே தொழிற்படுத்துகிறது.

## உள்நாட்டு வங்கித் தொழில்

அரச, அரச உத்தரவாதப் பிணைகளையும், வர்த்தக, உற்பத்திக் கடன்கள் என்பவற்றிற்குச் சலுகைக் காலச் சான்றிதழ்களையும் வைத்து வர்த்தக வங்கிகளால் பெறப்பட்ட குறுந்தவணை முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதம் (வங்கி வீதம்) 1981 ஓகத்து 17 இலிருந்து ஆண்டொன்றுக்கு 12 சத வீதத்திலிருந்து 14 சத வீதமாக உயர்த்தப்பட்டது. எனினும் இவ்வகையிலிருந்தான ஏற்றுமதிகளை நிதியீட்டுவதற்கு வங்கிகளுக்கு உதவும் நோக்கமாக வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட மத்திய வங்கியின் குறுந்தவணை மீள்நிதியிடல் கடன்களின் மீதான வட்டி வீதம் தொடர்ந்தும் ஆண்டொன்றுக்கு 12 சத வீதமாகவேயிருந்தது.

வங்கி வீதத்தில் வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட மத்திய வங்கிக் கடன் எல்லா வங்கிகளுக்குமான ஒரு முழுமையான வரையறைக்குட்பட்டிருந்தது. இந்த எல்லை ஒவ்வொரு வர்த்தக வங்கியினதும் அவற்றின் தெரிந்தெடுக்கப்பட்ட சொத்துவிடயங்களின் அடிப்படையில் ஒதுக்கில் ஆகக் குறைந்தது ரூ, 10 இலட்சத்துக்குச் சீராக்கம் செய்யப்பட்ட பின்னர் ஒவ்வொரு வங்கியினது தெரிந்தெடுக்கப்பட்ட சொத்து விடயங்களின் அடிப்படையில் ஒவ்வொரு வர்த்தக வங்கிகளுக்குமான ஒதுக்கு ரூ. 10 இலட்சத்திற்கும் குறைவாக இருந்தது. இன்றியமையாதன அல்லாத நோக்கங்களுக்கான முற்பணங்கள் 1976 ஆம் ஆண்டு யூன் 30 ஆம் நாளில் உள்ளவாறுன அத்தகைய முற்பணங்களின் மட்டத்தை விஞ்சாதவிடத்து ஒவ்வொரு வங்கியும் குறிப்பிடப்பட்ட எல்லைவரையில் கடன்பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டன. இல்லாவிடின் குறிப்பிட்ட எல்லை அத்தகைய விஞ்சல் தொகையால் குறைக்கப்பட்டது. இலங்கையிலிருந்தான ஏற்றுமதிகளை நிதியீட்டுவதற்கென வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் மீள் நிதியிடலுக்கான வர்த்தக வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட கடன்பாடுகளும் வரையறைக்குட்பட்டேயிருந்தன. தண்ட வீதங்களின் படிப்படியான அளவின் அடிப்படையில் வங்கி வீதத்தில் பெறக்கூடிய கடன்பாடுகளின் வரையறைக்குமேல் வர்த்தக வங்கிகளுக்கு வங்கி முற்பணங்களை வழங்கியது. 1981 ஓகத்து 17 இலிருந்து தண்டவீதம் ஆண்டுக்கு 21 சதவீதத்திலிருந்து 30 சத வீதம் வரையிலமைந்ததுடன் ஒவ்வொரு வங்கியினதும் வரையறுக்கப்பட்ட மட்டங்களுக்கு மேலான கடன்பாட்டு எல்லையிலேயே தங்கியிருக்கும்.

நெல், காய்கறிகள், ஏனைய குறிப்பிட்ட பயிர்கள் ஆகியவற்றினுற்பத்தி தொடர்பான கூட்டுறவு நிறுவனங்களின் அல்லது தனிப்பட்டவர்களின் சலுகைக் காலச் சான்றிதழ்களுக் கெதிராக வர்த்தக வங்கிகளுக்கு மத்திய வங்கியால் வழங்கப்பட்ட முற்பணங்களின் வட்டி வீதம் தொடர்ந்தும் ஆண்டொன்றுக்கு 1.5 சத வீதமாகவேயிருந்தது. நெல் கொள்வனவையும் உள்ளூரில் பயிரிடப்பட்ட ஏனைய குறிப்பிட்ட சில பயிர்களினது கொள்வனவையும், களஞ்சியப்படுத்தலையும் நிதியீட்டுவதற்காகக் கூட்டுறவு நிறுவனங்களுக்கும், கமநலப் பணி நிலையங்களுக்கும் அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களுக்கும் வர்த்தக வங்கிகளினுல் வழங்கப்பட்ட முற்பணங்களுக்கெதிராக வர்த்தக வங்கிகளினுல் சலுகைக் காலச் சான்றிதழ்களை வைத்துப் பெறப்பட்ட வங்கி முற்பணங்களின் மீதான வட்டி வீதம் ஆண்டுக்கு 3 சத வீதமாக மாற்றமின்றியிருந்தது.

**அரசாங்கக் கணக்குகள்**

அரசாங்கக் கணக்குகளை அரசின் வங்கியாளராக தொடர்ந்தும் அரச திணைக் களங்கள் , சட்டநியதிச் சபைகள் ஆகியவற்றின் கணக்குகளைப் பேணி வருகிறது.

1981 திசெம்பர் இறுதியில் அரச கணக்கு கிளையிலுள்ள தொழிற்படும் கணக்குகளின் எண்ணிக்கை (அரச திணைக்களங்கள் 134. சட்ட நியதிச்சபைகள் 14) 148 ஆக இருந்தது.

1981 மாச்சு 18 இலிருந்து அரசாங்கக் கணக்குக் கிளைகளின் கணக்கீட்டுமுறை கணனி முறையின் கீழ்க் கொடுண்டுவரப்பட்டதுடன் அதில் கணக்கு வைத்திருப் போருக்கு சிறந்த பணியையும் வழங்குகிறது.

அஞ்சல் மா அதிபரின் வேண்டுகோளின்படி இதுவரை காலமும் முடிக்குரிய முக வர்களால் மேற்கொள்ளப்பட்டுவந்த சேகரிப்புக்கள், வரவு வைத்தலுக்கான வெளி நாட்டுக் காசோலைகள்வகைகளை. அரசாங்கக் கணக்குகளை ஏற்றுக்கொண்டது.

**திறைசேரி உண்டியல்கள்**

இலங்கை மத்திய வங்கி, திறைசேரி உண்டியல்களின் வெளிச்சந்தைத் தொழிற் பாடுகளை 1981 ஏப்பிரல் 21 இல் தொடங்கியது. இத்திட்டத்தின் கீழ் வங்கி தனது சொந்த முதலீட்டுப்பட்டியல்களை விற்பனைசெய்வதுடன், வேறுபட்ட முதிர்ச்சித் தன்மைகொண்ட திறைசேரி உண்டியல்களையும் மீள் கொள்வனவு செய்கிறது. கழிவு வீதமானது சந்தை வீதங்களுடன் இணைந்தும், பணச்சந்தையிலுள்ள திரவத் தன்மையைக் கணக்கிலெடுத்தும் ஒவ்வொரு வேலைநாளிலும் வேறுபடுகிறது. 19,81 ஏப்பிரல் 21 இலிருந்து 1981 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் ரூ. 91493 இலட்சம் மொத்தப் பெறுமதியுடைய திறைசேரி உண்டியல்கள் இத்திட்டத்தின்கீழ் விற்கப்பட்டன. இதே காலப்பகுதியில் மீள் கொள்வனவுகள் ரூ. 46,535 இலட்சமாக விளங்கின. விற்கப்பட்டதும் 1981 திசெம்பர் 31 இல் முதிர்ச்சியடையாதிருந்தது மாகிய மொத்தத் தொகை ரூ. 7,094 இலட்சமாயிருந்தது. இவ்வாண்டுக் காலப்பகு தியில் திறைசேரி உண்டியல்களின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்குப் பொருந் தக்கூடிய கழிவு வீதங்கள் ஆண்டுக்கு 13.5 சதவீதத்திலிருந்து 17 சதவீதமாக வேறு பட்டன. திறைசேரி உண்டியல்களில் தொழிற்படும் சந்தையொன்றினை ஊக்குவிக்கும் நோக்கமாக இரண்டாந்தரச் சந்தையில் வங்கியின் திறைசேரி உண்டி யல் விற்பனைகள் கொழும்பில் இயங்கும் பண பரிமாற்றத் தரகர்களினால் மட்டுமே மேற்கொள்ளப்பட்டன. எனினும், திறைசேரி உண்டியல்களை வைத்திருக் கும் எவரும் தரகர் ஒருவருடைய தலையீடின்றி நேரடியாகவே வங்கியினல் மீளக் கழிவு செய்யப்பட்டு பெற்றுக்கொள்ளலாம்.

**கட்டாயச் சேமிப்புக்கள்**

மத்திய வங்கியானது 1971 இன் எண் 6 கொண்ட கட்டாயச் சேமிப்புக்கள் சட்டத்தினதும் 1972 இன் எண் 15 கொண்ட வருவாய், கட்டாயச் சேமிப்புக்கள் மீதான உச்சவரம்புச் சட்டத்தினதும் நியதிகளில் சேகரிக்கப்பட்ட பணத்தின் பாது காவலனாகத் தொடர்ந்தும் விளங்கியதுடன் அரசின் சார்பில் கட்டாயச் சேமிப்பு நிதியத்தின் நிருவாகத்தையும் மேற்கொண்டது. இவ்வாண்டில் வங்கிபெற்ற 1,775 மீளளிப்பு விண்ணப்பங்கள் மீது உதவுதொகை செலுத்தியோருக்கு ரூ. 6,267,857.35 (வட்டிஉட்பட) கொண்ட தொகையை மீளச் செலுத்தியது.

**நடுத்தர நீண்ட தவணைக் கொடுகடன் நிதியம்**

1981 ஆம் ஆண்டில் மத்தியவங்கி அதன் நடுத்தர நீண்டதவணைக் கொடுகடன் நிதியத்தின் கீழ் மீள்நிதியிடல் திட்டத்தைத் தொடர்ந்தும் தொழிற்படுத்தியது.

1981 காலப்பகுதியில் பகிரப்பட்ட மீள்நிதியிடல் கடன்களின் மொத்தம் 1980 இல் வழங்கப்பட்ட ரூ. 1,439இலட்சத்துடனைப்பிடுகையில் ரூ. 2,640இலட்சத்துக்கு வகைகூறியது.

**நாணய வெளியீடு**

1981 இன் இறுதியில், மத்தியவங்கியின் மொத்த நாணய வெளியீடு ரூ. 56,435 இலட்சமாக விளங்கி, 1980 திசெம்பருடன் ஒப்பிடுகையில் ரூ. 6,340 இலட்சம் அல்லது 12.6 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. முன்னைய ஆண்டின் அதிகரிப்பான ரூ. 6,676 இலட்சத்துடனைப்பிடுகையில் 1981 இல் தாள் நாணயச்சுற்றோட்டம் ரூ. 6,048 இலட்சத்தால் அதிகரித்தது. வெளிநிற்கும் மொத்த நாணய வெளியீட்டினது உள்ளடக்கம் ஒரு புறத்தில் ரூ. 1000 இனத்திலமைந்த புதியதாள் நாணயத்தின் அறிமுகத்தினாலும் ரூ. 100, ரூ. 50, ரூ, 20 இனங்களிலேற்பட்ட அதிகரிப்புக்களினாலும் மறுபுறத்தில் ரூ. 10, ரூ. 5. ரூ. 2 இனங்களிலேற்பட்ட வீழ்ச்சிகளினாலும் சில மாற்றங்களுக்குட்பட்டது. ரூ. 1000, ரூ. 100, ரூ. 50 இனங்களிலுள்ள தாள் நாணயங்கள் மொத்த அதிகரிப்பில் ரூ, 6,126 இலட்சத்துக்கு வகைகூறின. 1981 இல் குத்தி நாணயச் சுற்றோட்டத்தினலேற்பட்ட மொத்த அதிகரிப்பு 1980 இன் ரூ. 207 இலட்சத்துடனைப்பிடுகையில் ரூ. 293 இலட்சமாயிருந்தது. குத்தி நாணயச்சுற்றோட்டத்திலேற்பட்ட மொத்த அதிகரிப்பில் ரூ. 5, ரூ. 2, ரூ. 1, 50சதம் ஆகிய இனங்களிலமைந்த குத்தி நாணயங்கள் ரூ. 221 இலட்சத்துக்கு வகைகூறின.

1981 திசெம்பரில் ரூ. 1000 இனத்திலமைந்த தாள் நாணயத்தின் அறிமுகத்துடன் ரூ. 500 இனத்திலமைந்த தாளொன்றை அறிமுகப்படுத்துவது பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. இத்தாள் நாணயங்களின் வெளியீடு ரூ. 50, ரூ. 100 இனங்களிலுள்ள தாள் நாணயங்களின் அமுக்கத்தினைக் குறைக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும். 1981 இல் ரூ. 5. ரூ. 2 ஆகிய இரு நினைவுக்குத்திகள் வெளியிடப்பட்டன. இவையிரண்டும் முறையேஇலங்கையில் அனைத்துலகவயதுவந்தோர்வாக்குரிமையின் 50 ஆவது ஆண்டினையும், மகாவலி அபிவிருத்தித்திட்டத்தினை நினைவு கூரும் முகமாகவும் வெளியிடப்பட்டன.

1982 இன் முதற்காலாண்டளவில், நாணயத்திணைக்களத்தில் நாணயக்காட்சிச் சாலையொன்று நிறுவும் முயற்சியொன்று தொடங்கப்பட்டுள்ளது.

**வங்கித்தொழில் அபிவிருத்தி**

நாட்டில் வங்கிக்கிளைகள் ஆரம்பித்தல் தொடர்பாக வெளிநாட்டு வங்கிகளாலும் நிதி நிறுவனங்களாலும் தொடர்ந்து அடிக்கடி விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கையில் 1981 மாச்சு 17 இல் டுபாய் வங்கியும், 1981 யூன் 02 இல் மத்திய கிழக்கு வரையறுக்கப்பட்ட யூனியன் வங்கியும், 1981 டிசம்பர் 01 இல் அம்ஸ்ரடாம் ரொட்டர்டாம் வங்கி என். வி. யும் ஆகிய மூன்று வெளிநாட்டு வங்கிகளின் கிளைகள் நிறுவப்பட்டன. அதே வேளை இலங்கை வங்கிகள் இவ்வாண்டில் 53 கிளைகளை ஆரம்பித்தன. அவை இலங்கை வங்கியின் 32 கிளைகளும், மக்கள் வங்கியின் 19 கிளைகளும் வரையறுக்கப்பட்ட அட்டன் நஷனல் வங்கியின் ஒரு கிளையும் இலங்கை வர்த்தகவங்கியின் ஒரு கிளையுமாகும்.வரையறுக்கப்பட்ட அட்டன் நஷனல் வங்கி ஒரு பணம் செலுத்தும் அலுவலகத்தையும் திறந்தது.இவ்வாறாக 1981இறுதியில் இலங்கையில் மொத்தமாக 24 வங்கிகள் செயற்பட்டதுடன் இதே காலத்தில் மொத்தமாக 673 கிளைகள் தொழிற்பட்டன. வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை இலங்கை வங்கியின் 101 வேளாண்மைப்பணி நிலையக் கிளைகளையும் உள்ளடக்கும்.

வணிக வங்கிப்பணிகளை அறிமுகப்படுத்துவதற்கான எடுத்துரைப்புக்கள் பொதுவாக வங்கியால் ஊக்குவிக்கப்பட்டன. முதலீடு பொருளாதார அபி விருத்தி என்பவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளித்து வெளிநாட்டு முதலீட்டையும் வங்கித்தொழில் நிறுவனங்களையும் நாட்டில் முதலிடுவதற்கு ஊக்குவித்து வரும் தற்போதைய பொருளாதார செழிப்பு நிலையில் வர்த்தக வணிக, நிதி நடவடிக்கைகள் உயர்வடைந்து பெருமளவானதும் நெகிழ்சியுடையதுமான மூல தன வளங்களுக்கும் புதிய வடிவிலான நிதிக்கும் தேவையை ஏற்படுத்தலாம். இத்தகைய ஒரு நிலையில் வளர்ச்சியடைந்து வரும் வங்கித் தொழிலையும் முதலீட்டையும் கொண்ட சமுதாயமானது அடிக்கடி நிதித்துறை நிபுணர்களின் மதியுரையையும் பணிகளையும் வேண்டி நிற்கும். இதனை அடைவதற்கு வணிக வங்கிகள் அல்லது வங்கித் தொழில் நிறுவனத்தில் பணிகள் பொருத்தமானதாக இருக்கலாம். ஏனெனில் அத்தகைய பணிகள் அல்லது அத்தகைய எல்லாப் பணிகளும் வர்த்தக வங்கிகளின் வழமையான எல்லைக்குள் அடங்குவதில்லை.

வங்கிக் கிளைகளைத் திறப்பதற்கான நியாயபூர்வமான காரணிகளின் நோக்குடன் வங்கித் தொழில் அபிவிருத்தித்திட்டத்தை அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பயிற்சி

அலுவலர்களுக்கும், கல்வி, கல்வியல்லாத (செய்முறைப் பயிற்சி) இரண்டு துறைகளிலும் பயிற்சி அளித்தல் இவ்வாண்டில் தொடர்ந்தும் இருந்தது. 1981 இல் மொத்தமாக 10 அலுவலர்கள் பட்டப்பின்படிப்புகளுக்குச் சென்ற அதே வேளை இதே காலத்தில் 54 அலுவலர்கள் குறுகிய காலப் பயிற்சி நெறிகளுக்கும் கலந்துரையாடல்களுக்கும் மாநாடுகளுக்கும் சென்றனர். குறிப்பாக கிராமியக் கொடுகடன் கிராமியக் செயற்றிட்டத்தை அடையாளம் காணுதல் / மதிப்பிடுதல் நிதியிடல் மற்றும் ஏனைய கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அதிகரித்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகளிலும் அது தொடர்பான துறைகளிலும் பயிற்சியளித்தலும் வங்கியின் அதிகரித்த கவனத்தை ஈர்த்தது,

பல்கலைக்கழகங்கள், ஏனைய கல்வி, தொழில் நிறுவனங்கள் போன்ற உள்நாட்டு நிறுவனங்களில் பயிற்சியளிப்பதிலும் வங்கியின் பயிற்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஈடுபட்டிருந்தன. மொத்தமாக 43 அலுவலர்கள் இத்தகைய உள்நாட்டுப் பயிற்சி நெறிகளுக்கு அனுப்பப்பட்டனர். பயிற்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக அலுவலகம் இவ் வாண்டில் மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கித் தொழிற்பாடுகளுக்கும், நிதித்துறைகளுக்குமாகப் பல கருத்தரங்குகளை நடாத்தியது.

1981 செத்தெம்பரில் மத்திய வங்கியின் கிராமிய வங்கித் தொழிலும் அலுவலர் பயிற்சிக் கல்லூரியும் நிறுவப்பட்டதுடன் வங்கித் தொழில் நிதித்துறைகள் தொடர்பான பயிற்சி தொழிற்பாடுகளைப் பொதுவாகக் கையேற்றது. அதே வேளை இவ் அலுவலகம் மத்திய வங்கி அலுவலர்களுக்குப் பயிற்சியளிக்கும் பொறுப்பைத் தொடர்ந்தும் கொண்டிருந்தது.

## வங்கி மேற்பார்வை

வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 1981 இல் நாணய விதிச்சட்டத்தின் 29 (1) பிரிவின் கீழ் பதினெட்டு வர்த்தக வங்கிகளைப் பரீட்சித்து முடித்ததினால் 1980/81 காலப் பகுதியில் இலங்கையில் தொழிற்படும் எல்லா வர்த்தக வங்கிகளினதும் பரீட்சையை நிறைவேற்றியது. 1981 இல் இத் திணைக்களம் நாணய விதிச் சட்டத்தின் 29 (2) பிரிவின் கீழ் வர்த்தக வங்கிகள் அல்லாத இரண்டு வங்கித் தொழில் நிறுவனங்களையும் பரீட்சித்தது.

இத்திணைக்களம் 1979இன் எண் 27 கொண்ட நிதிக் கூட்டு நிலையங்கள் சட்டத்தின் கட்டுப்பாட்டுவிதிகளின்கீழ் நாணயச் சபையுடன் பதிவு செய்யப்பட்ட நிதிக் கூட்டு நிலையங்களையும் மேற்பார்வை செய்வதிலும் பரீட்சிப்பதிலும் ஈடுபட்டது. நிதிக் கூட்டு நிலையங்கள்இச்சட்டத்தின் கட்டுபாட்டு விதிகளின் 15 (1) ஆம் பிரிவின் கீழ் ஏழு நிதிக் கூட்டு நிலையங்களை ஆய்வு செய்யும் தொழிற்பாடு இவ்வாண்டில் தொடங்கியதுடன் இவற்றில் நான்கின் ஆய்வுகள் முடிவுற்றன. இவ்வாண்டில் இச்சட்டத்தின் கீழ் நிதிக் கூட்டு நிலையங்களிலிருந்து பதிவு செய்வதற்காக பெறப்பட்ட விண்ணப்பங்கள் மதிப்பிடப்பட்டதுடன் இரண்டு கூட்டு நிலையங்கள் நாணயச் சபையுடன் பதிவு செய்யப்பட்டன. பொதுமக்களிடமிருந்து வைப்புப்பணத்தைக் கவர்வதற்கு நிதிக்கூட்டு நிலையங்கள் மேற்கொள்ளும் விளம்பரங்களைக் கட்டுப்படுத்துவதற்கான விதி முறைகள் இச்சட்டத்தின்கீழ் நாணயச்சபையினால் 1981 யூலையில் கொண்டு வரப்பட்டன.

வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் திட்டத்தின் கீழ் வர்த்தக வங்கிகளால் ஏற்படுத்தப்பட்ட வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் கூறுகளின் கொடுக்கல் வாங்கல்களை மேற்பார்வைசெய்யும் நிகழ்ச்சித் திட்டத்தினை திணைக்களம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

## அபிவிருத்தி நிதி

திசெம்பர் 1 இலிருந்து கிராமிய கொடுகடன் அபிவிருத்தி நிதித்திணைக்களம், அபிவிருத்தி நிதித்திணைக்களமாக மீள வடிவமைக்கப்பட்டதுடன் முன்னைய கிராமிய கொடுகடன் அபிவிருத்தித் திணைக்களத்தின் கிராமிய கொடுகடன் பிரிவிற்குப் பொறுப்பாக கிராமிய கொடுகடன் திணைக்களம் என்ற புதியதொரு திணைக்களம் ஏற்படுத்தப்பட்டது.

## நடுத்தர நீண்டகால கொடுகடன் நிதியம்

திணைக்களம் மீள வடிவமைத்ததன் விளைவாக பின்வரும் மீள் நிதியிடல் வகைகள் அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் அதிகாரத்திற்குள் வந்தன.

(i) பிரிவு ii ஏற்றுமதிக்கான பொருட்கள் பண்டங்களின் உற்பத்திக்கும் அத்தகைய உற்பத்திக்கு முன்னைய நடவடிக்கைகளுக்கும் உட்பட இலங்கையிலிருந்தான ஏற்றுமதி ஊக்குவிப்பு அபிவிருத்திக்காக கொடுக்கப்படும் கடன்கள்.

(ii) பிரிவு iii வரிவிலக்குகளைக் கொண்டிருக்கும் ஒப்புதலளிக்கப்பட்ட முதலீடுகளுக்கு வழங்கப்பட்ட கடன்களையும் திட்டங்களுக்கு உட்படாது அமைச்சுக்களால் அங்கீகரிக்கப்பட்ட வேளாண்மை கடற்றொழில் நோக்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களையும் உள்ளடக்கும்.

(iii) பிரிவு iv மேற்குறிப்பிடப்படாத ஏனைய நோக்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை அவை நாணய விதிச்சட்டத்தின் 88 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்டவாறு உற்பத்தி நோக்கங்கள் என்ற கருத்தின் கீழ் அமையுமென நாணயச்சபை கருதுமாயின் அக்கடன்களையும் உள்ளடக்கும். வகை 1 இன் மீள்நிதியிடல் கடன்கள் கிராமிய கொடுகடன் திட்டத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய தொழிற்பாடுகளுள் அடங்கும்.

ஏற்றுமதி ஊக்குவிப்பு அபிவிருத்திக்கு (பிரிவு 11) சலுகை அடிப்படை நிதி வசதிகளுக்கான மீள் நிதியிடல் வசதிகள் 1980 ஒற்ரோபரில் தொடங்கப்பட்டன. இவ் ஏற்பாடுகளின் கீழ் மத்திய வங்கிக் கடனில் 80 சதவீதம் அளவுக்கு ஆண்டொன்றுக்கு 10 சதவீத மீள் நிதியிடல் வட்டி வீதத்தில் நிர்ணயிக்கப்பட்ட 13 சதவீத கடன் வழங்கு வட்டிமேல் எல்லையில் மீள் நிதியிடல் வசதிகளை வழங்குகின்றது. மத்திய வங்கி மீள் நிதியிடல் திட்டத்தின் பிரிவு iii, iv, பிரிவுகளைப் போலன்றி பிரிவு 11 இன் கீழ் நிதியிடல் வசதிகளை பயன்படுத்தும் வர்த்தக வங்கிகள் வங்கிகளின் சொந்த மூல வளங்களிலிருந்து வருகின்ற நிதிகளில் 20 சதவீதத்தை உள்ளடக்கிய மொத்தக் கடனின் மீது ஒரே வீதமாக 13 சதவீதக் கட்டணத்தை விதிக்குமாறு கேட்கப்பட்டன. ஏற்றுமதி மீள் நிதியிடல் வசதியைப் பயன்படுத்துவதற்கு வர்த்தக வங்கிகளிடையே சில பின்னடைவு காணப்பட்டதன் விளைவாக பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்களுக்கு இது கவர்ச்சியற்றதாக இருந்தது. இதன் விளைவாக வர்த்தக வங்கிகளால் 1981 இல் 14 விண்ணப்பங்கள் மாத்திரம் சமாப்பிக்கப்பட்ட வேளையில் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை ஏறக்குறைய 40 முயற்சிகளுக்கு ஏற்றுமதிக் கைத்தொழில் அந்தஸ்தை வழங்கியது. வர்த்தக வங்கிகளைப் பொறுத்தவரை பின்வாங்கலுக்கு ஏற்றுமதி சார்ந்த திட்டங்களுக்கு அவற்றின் சொந்த நிதிகளின் மீது குறைந்தளவு இலாபத்தைப் பெறக் கட்டாயப்படுத்துவதே முக்கிய காரணமாகும். இத்திட்டத்தில் வர்த்தக வங்கிகளை நன்கமைந்த வகையில் பங்குபற்ற வைப்பதற்கு ஊக்குவிக்கும் வகையில கைத்தொழில் அபிவிருத்திச்சபை அங்கீகரிக்கும் திட்டங்களுக்கு மத்திய வங்கி 100 சதவீத மீள நிதியிடல் வசதிகளை அளிப்பதற்கு இணங்கியுள்ளது. இம்மீளாய்வைத் தொடர்ந்து நடுதர நீண்டகால கொடுகடன் திட்டத்தின் பங்களிக்கப்பட்ட வகைகளின் கீழ் மீள நிதியிடல் வசதிகள் பெற்றுக் கொடுப்பதற்கான மாற்றியமைக்கப்பட்ட நியதிகள், நிபந்தனைகள் பின்வருமாறு அமைகின்றன.

அட்டவணை 2.3

நடுத்தர நீண்டகால மீள் நிதியிடல்

| பிரிவு | மீள் நிதியிடல் அளவு மொத்தக் கடனின் (சதவீதம்) | கடன் காலப் பகுதி (ஆண்டுகள்) | மீள் நிதியிடலின் வட்டிவீதம் (i) செயற்றிட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 50 இலட்சமும் அதற்குக் கீழும் % | மீள் நிதியிடலின் வட்டிவீதம் (ii) செயற்றிட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 50 இலட்சத்திற்கு மேல் % | கொடுகடன் நிறுவனத்திற்கு ஒப்புதலளிக்கப்பட்ட தொகை (i) செயற்றிட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 50 இலட்சமும் அதற்குக்கீழும் % | கொடுகடன் நிறுவனத்திற்கு ஒப்புதலளிக்கப்பட்ட தொகை (ii) செயற்றிட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 50 இலட்சத்திற்கு மேல் % | செயற்றிட்டத்தின் மொத்தச் செலவுக்காக தொழில் முயற்சி யொன்று செலுத்த வேண்டிய ஆகக் குறைந்த தொகை % |
|---|---|---|---|---|---|---|---|
| I | 100 | 3-15 | 8½ | 8½ | 4 | 4 | 10 |
| II | 100 | 3-15 | 10 | 11½ | 2 | 1½ | 20 |
| III | 60 | 3-15 | 11 | 11 | 5 | 5 | 20 |
| V | 60 | 3-15 | 13 | 13 | 5 | 5 | 20 |

ஏற்றுமதி தவிர்ந்த கைத்தொழில் அபிவிருத்தியில் வர்த்தக வங்கிகளையும் கொடு கடன் நிறுவனங்களையும் முழுமையாக பங்கு பற்றுவதற்கு ஏற்றவகையில் 1981இல் மீள் நிதியிடல் திட்டத்தின் நோக்கங்கள் மேலும் விரிவுபடுத்தப்பட்டன. 1981 ஒற்றோபரில், இந் நாள் வரை நடுத்தர நீண்ட கால கொடு கடன் திட்டத்தின் கீழ் கடன் பெற தகுதியற்றவைகள் எனக் கருதப்பட்ட அரச துறைக் கூட்டுத்தாபனங்கள், கைத்தொழில் அறிவியல் அலுவல்கள் அமைச்சின் வேண்டு கோளின்படி எந்தவொரு குறிப்பிட்ட திட்டத்தினைப் பொறுத்தவரையிலும் நடைமுறையிலிருக்கும் ரூபா 300 இலட்சம் மேலெல்லைக்கு உட்பட்ட விதத்தில் ஏற்றுமதி சார்ந்த திட்டங்களுக்கு மாத்திரம் நடுத்தர நீண்டகால கொடு கடன் நிதியத்தின் கீழ் உதவிகளைப் பெற அத்தகைய நிறுவனங்களும் கடன் பெற தகைமையாக்கப்பட்டன.

அத்துடன் நடுத்தர நீண்டகால கொடுகடன் நிதியத்தின் கீழ் உதவிபெறும் திட்டங்கள் பொது மக்களுக்கு பங்குகளை வழங்குதல் வேண்டும் என 1980 இல் நடை முறைக்கு கொண்டுவரபட்ட விதி 1981 இலும் தொடர்ந்திருந்தது. இக் கடன் பாட்டின் முக்கிய நோக்கம் கூட்டு நிலையங்களின் உடமையை பரவலாக்குவதுடன் நாட்டில் நன்கமைந்த இருப்புச் சந்தையினை ஏற்படுத்துவதை ஊக்குவிப்பதேயாகும். மீள் நிதியிடல் வசதிகள் வழங்கப்பட்ட பிரிவுகள் ii iii iv ஆகியவற்றின் கீழ் பெறப்படும் ரூபா 50 இலட்சத்துக்கு மேலான அனைத்துக் கடன்களுக்கும் இத்தேவைப்பாடுகள் பொருந்துவதாகும்.

பிரிவுகள் iii iv வகைகளுக்குள் பகுக்கப்பட்ட கடன்களுக்கு உதவியாக நடுத்தர நீண்ட கால கொடுகடன் நிதியத்திலிருந்து மீள் நிதியிடல் மூலமாக 1981இல் ரூபா 2,609 இலட்சம் ஒப்புதலளிக்கப்பட்டது. இத்தொகை 1980 இல் ரூ. 1,217 இலட்சமாக காணப்பட்டது. மீள் நிதியிடலின் அடிப்படையிலான பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளது.

### அட்டவணை 2.4

### நடுத்தர நீண்டகால மீள் நிதியிடலுக்கான ஒப்புதல்கள் வகைகள் பிரிவுகள் 1 உம் 11 உம்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1979 | | 1980 | | 1981 | |
|---|---|---|---|---|---|---|
| | கடன் தொகை | மீள் நிதியிடல் தொகை | கடன் தொகை | மீள் நிதியிடல் தொகை | கடன் தொகை | மீள் நிதியிடல் தொகை |
| வேளாண்மை | 1.0 | 1.0 | 1.0 | 0.7 | 31.5 | 19.9 |
| கடற்றொழில் | 1.7 | 1.7 | — | — | — | — |
| கைத்தொழில் | 38.1 | 27.7 | 62.1 | 49.0 | 77.0 | 67.6 |
| உணவகங்கள் | — | — | 52.0 | 36.0 | 105.7 | 83.6 |
| ஏனையவை | 0.5 | 0.5 | 60.0 | 36.0 | 145.5 | 89.8 |
| மொத்தம் | 41.3 | 30.9 | 175.1 | 121.7 | 359.7 | 260.9 |

1981 இன் ஏற்றுமதித் துறையின் மீள் நிதியிடல்கள் (நடுத்தர நீண்டகால கொடுகடன் நிதி திட்டத்தின் வகை ii கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 2.5

நடுத்தர நீண்டகால மீள் நிதியிடலுக்கான ஒப்புதல்கள் - ஏற்றுமதித்துறை

பத்து இலட்சம் ரூபாய்கள்

| | கடன் தொகை | மீள் நிதியிடல்தொகை |
|---|---|---|
| ஏற்றுமதித்துறையின் செயற்றிட்டங்கள் | 35.4 | 32.0 |
| மொத்தம் | 35.4 | 32.0 |

முன்னைய இரு அட்டவணைகளையும் நோக்குகையில் நடுத்தர நீண்ட கால கொடுகடன் நிதியத்தின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டுகளிலும் பார்க்க குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து வருகின்றமையைக் காணலாம். இவ்வதி கரிப்பிற்கு மத்திய வங்கியால் வழங்கப்படும் கவர்ச்சியான குறைந்த மட்ட வட்டி வீதங்களும் அதே போல் நீண்ட தவணைக் கடன்களில் கொடுகடன் நிறு வனங்களின் பெருமளவிலான பங்கு பற்றுதலுமே காரணமாகும்.

**சிறிய அளவிலான கைத்தொழில் திட்டங்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டம்**

1978 இல் சிறிய அளவிலான கைத்தொழில் திட்டத்தின் தொழிற்பாடுகள் தொடங்கின. இத்திட்டத்தின் கீழ் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் விதந் துரைப்பின் பேரில் மக்கள் வங்கி, இலங்கை வங்கி, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் போன்ற ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன் நிறுவனங்களால் அளிக்கப்பட்ட கடன்களுக்கு அரசாங்கத்தின் சார்பில் மத்திய வங்கி உத்தரவாத மொன்றை அளிக்கின்றது. உத்தரவாதத்தின் மொத்த அளவு மொத்த கடனின் பொறுப்பின் 75 சதவீதம் ஆகும். 1980 இறுதியில் மத்திய வங்கி ரூ. 309 இலட் சத்தினை மொத்தமாகக் கொண்ட 764 கடன்களுக்கு உத்தரவாதமளித்த வேளையில் 1981 இல் ரூ. 349,000/- கொண்ட 3 கடன்களுக்கு மாத்திரம் உத்தரவாதங்களை வழங்கியிருந்தது. தேசிய அபிவிருத்தி வங்கியின் சிறிய நடுத்தர கைத்தொழில் கடன் திட்டம் தொடங்கியதுடன் சிறிய அளவிலான கைத்தொழில் திட்டங்களின் தொழிற்பாடுகள் அருகத் தொடங்கின.

சிறு அளவு கைத்தொழில் திட்டத்துடன் தொடர்புள்ள கட்டணம் சேகரிப்பு அபிவிருத்தியும் பின்தொடர் வேலைகள் வடிவிலான உத்தரவாதத்திற்கு பின்னைய வேலைகள் 1981 இல் மேற்கொள்ளப்பட்டன, அத்துடன் கொடுகடன் நிறுவனங் களிலிருந்து திணைக்களத்தினுல் பெறப்படுகின்ற உத்தரவாதக் கோரல்கள் அவை தீர்ப்பதற்கு முன்னர் நுணுக்கமாக ஆராயப்பட்டு வரப்படுகின்றன. ஆய்வுகள் முற்றுப் பெருமையால் உத்தரவாதக்கோரல்களாகப் பெறப்பட்ட 33 கடன்களில் ஒன்றேனும் தீர்த்து வைக்கப்படவில்லை.

உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்களின் மொத்தப் பெறுமதியும் வெளிநிற்கும் உத்தரவாதங்களில் மத்திய வங்கியின் இடர் காப்பின்மையும் பின்வரும் அட்ட வணையில் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 2.6

பத்து இலட்சம் ரூபாய்கள்

| | 1980 | 1981 |
|---|---|---|
| கடன்களின் மொத்தப் பெறுமதி | 30.6 | 31.0 |
| உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்களின் மொத்த வெளிநின்ற நிலுவை | 24.3 | 17.1 |
| 75% இடர்க்காப்பின்மை | 18.2 | 12.8 |
| இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் இடர்காப்பின்மை | 59.8% | 41.3% |

**சிறிய நடுத்தரக் கைத்தொழில்கள் கொடுகடன் உத்தரவாதத் திட்டம்**

நாணய விதிச்சட்டத்தின் 108 (அ) பிரிவின் கீழ் இலங்கை தேசிய அபி விருத்தி வங்கியின் சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டத்தின் கீழ் வழங்கப் பட்ட கொடுகடன்களை உள்ளடக்குவதற்காக கொடுகடன் உத்தரவாத திட்ட மொன்றை அமைப்பதற்கு நாணயச் சபை 1979 இறுதியில் ஒப்புதல் வழங்கியது. இத்திட்டத்தின் கீழ் தொழிற்பாடுகள் 1979 ஒற்ரோபரில் தொடங்கின. இத் திட் திட்டத்தின் நிர்வாகத்திற்கு தேசிய அபிவிருத்தி வங்கி இலங்கை அரசின் ஊடாக பன்னுட்டு அபிவிருத்தி அமைப்பிலிருந்து 160 இலட்சம் ஐ. அ. டொலர்களைக் கொடு கடனுகப் பெற்றது. இத்தொகையில் ஐ. அ. டொலர் 120இலட்சம் கொண்ட தொகை பங்கு கொள்ளும் கொடு கடன் நிறுவனங்கள் (மக்கள்வங்கி, இலங்கை வங்கி, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், வறையறுக்கப்பட்ட அட்டன் நெசனல் வங்கி, வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி) உதவுவதற்காக வும் சிறிய நடுத்தர கைத்தொழில் திட்ட முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கடன் களில் 80% வரை மீள் நிதியிடல் வசதிகளைப் பெற ஒதுக்கப்பட்ட வேளையில் இக் கடனில் 60சதவீதம் வரை உள்ளடக்குவதற்கான உத்தரவாதங்களை மத்திய வங்கி வெளியிட்டிருந்தது.

வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட உத்தரவாதங்களின் அளவு. இதன் தொடக்கத்திலிருந்து உத்தரவாதமளிக்கப் பட்ட திட்டங்களின் கைத்தொழில் அடிப்படையிலான பகுப்பாய்வு ஆகிய வற்றை பின்வரும் அட்டவணை சுட்டி காட்டுகின்றது.

அட்டவணை 2.7

## வழங்கப்பட்ட சிறிய, நடுத்தரக் கைத்தொழில் கொடுகடன் உத்தரவாதங்கள்

ரூபாய்களில்

| கைத்தொழில் | 1980 | | 1981 | |
|---|---|---|---|---|
| | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை |
| 1, நெல் குற்றுதல் ... | 98 | 11,946 | 200 | 23,911 |
| 2. மென் பொறியியல் கைத்தொழில்கள் ... | 62 | 6,862 | 73 | 6,266 |
| 3. செங்கட்டிகளும் ஏனைய கட்டிடப் பொருட்களும் ... | 130 | 15,245 | 111 | 21,352 |
| 4. தைக்கப்பட்ட உடுப்புகள், பத்திக், கைத்தறி விரிப்புக்கள் இன்னோரன்னவை .. | 67 | 5,357 | 52 | 4,988 |
| 5. இறப்பரும் இறப்பரை அடியாகக் கொண்ட பொருட்களும் ... | 9 | 768 | 16 | 3,447 |
| 6. காலணிகளும் ஏனைய தோல் உற்பத்திகளும் ... | 11 | 728 | 6 | 660 |
| 7. பனங்கட்டியும், கரும்பு உற்பத்திகளும் .. | 1 | 29 | 4 | 91 |
| 8. தளபாடங்களும் ஏனைய மர உற்பத்திகளும் ... | 41 | 4,692 | 15 | 4,246 |
| 9. தும்பும் தும்பை அடிப்படையாகக்கொண்ட உற்பத்திகளும் | 55 | 4,208 | 27 | 2,813 |
| 10. எழுதுகருவிகளும் ஏனைய தாளுற்பத்திகளும் ... | 22 | 3,849 | 6 | 905 |
| 11. உணவும் குடிபானங்களும் . | 33 | 2,934 | 26 | 1,900 |
| 12. பூச்சுகள், மினுக்கிகள், வண்ணமெருகு எண்ணெய் இன்னோரன்னவை .. | 2 | 600 | 6 | 1,293 |
| 13. வானொலி, ஈருருளிகள் ஆகியவற்றிக்கான உதிரிப்பாகங்கள் .. | 8 | 244 | 5 | 119 |
| 14. சவர்க்காரம் ஏனைய குளியலறைப் பொட்ருகள் ... | 10 | 321 | 18 | 1,316 |
| 15. கைப்பணிப் பொருட்களும், பொம்மைகளும் .. | 9 | 412 | 19 | 654 |
| 16. சுருட்டுகளும், பீடிகளும் ... | 3 | 21 | 3 | 26 |
| 17. மீன்பிடி வள்ளங்களும், உள்ளூர் கடற்றொழிலும் ... | 7 | 2,092 | 4 | 1,600 |
| 18. நகைகளும் இரத்தினக் கற்களும் ... | 2 | 208 | 6 | 977 |
| 19. விளையாட்டுப் பொருட்கள் ... | 1 | 65 | 1 | 15 |
| 20. வேளாண்மைப் பொருட்கள் ... | 2 | 420 | 2 | 44 |
| 21. கண்ணாடியும் ஏனைய கண்ணாடி உற்பத்திகளும் ... | 4 | 490 | 3 | 361 |
| 22. பித்தளையும் அலுமினியப் பொருட்களும் ... | 31 | 2,120 | 47 | 4,051 |
| 23. பல்வகை ... | 18 | 2,125 | 36 | 3,179 |
| 24 அச்சகம் ... | ... | ... | 29 | 6,060 |
| 25. மரம் அரிதல் ... | ... | ... | 48 | 8,840 |
| மொத்தம் | 626 | 65,736 | 763 | 99,114 |

நாட்டின் நகரம் சார்ந்த குடித்தொகையின் பெரும் பகுதியை உள்ளடக்கும் கொழும்பு, குருநாகல், புத்தளம், கம்பஹா, கண்டி, மாத்தறை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்கள் இத்திட்டத்திலிருந்து பெருமளவில் நன்மை பெற்றவேளையில் தும்பாக்கல், செங்கற்கள் தயாரித்தல், நெல் குற்றுதல், ஓடுகள் செய்தல், கல்லரைத்தல் போன்ற உள்நாட்டு கைத்தொழில்களின் அமைப்பைபிரதிபலிப்பதுடன் தமது அபிவிருத்திக்கான நிதியிடலில் பெரும் பங்கினைப்பெற்றவையாகவும் இருந்தன.

மத்திய வங்கியால் உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்களின் தொடர்பான கடன்பாடுகளின் இடர்வினை பின்வரும் அட்டவணை சுருக்கித்தருகின்றது.

அட்டவணை 2.8

**சிறிய, நடுத்தரக் கைத்தொழில் செயற்றிட்டங்களின்கீழ் வழங்கப்பட்ட உத்தரவாதங்களும் இடர்காப்பின்மையும்**

பத்து இலட்சம் ரூபாய்கள்

| | 1980 | 1981 |
|---|---|---|
| வழங்கப்பட்ட உத்தரவாதங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கும் மொத்தப் பெறுமதி | 65.8 | 164.8 |
| இடர்க்காப்பின்மையின் 60% | 39.5 | 98.9 |

பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பின் கடன் ஒப்பந்த முடிவுடன் சிறிய நடுத்தர கைத்தொழில் திட்டத்தின் கீழான தொழிற்பாடுகள் 1982 முதல் காலாண்டில் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 1981 இன் காலப்பகுதியில் தேசிய அபிவிருத்தி வங்கி இலங்கை அரசின் உடன்பாடுகளுடன் எதிர்வரும் ஆண்டுகளில் சிறிய நடுத்தரக் கைத்தொழிலுக்கு நிதியிடும் நோக்கில் ஐ. அ. டொலர் 300 இலட்சம் கொண்ட இரண்டாவது கடனொன்று பெறுவது தொடர்பாக பன்னாட்டு அபிவிருத்தி அமைப்புடன் பேச்சு வார்த்தைகளை நடாத்தி முடித்தது. IIவது சிறிய நடுத்தர கைத்தொழில் திட்டம் (II) பங்கு பற்றும் கொடுகடன் நிறுவனங்கள் ஊடாக சிறிய நடுத்தரத் திட்டங்களுக்கு தொடர்ந்து மீள் நிதியிடல் வசதியளிக்கவுள்ளது. சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டம் (1) இன் நிர்ணயிக்கப்பட்ட ரூபா 10 இலட்சத்திற்கு எதிராக சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டம் (2) இன் கீழ் எந்த ஒரு திட்டத்துக்குமான ஆகக்கூடிய கடன் ரூ. 20 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பன்னாட்டு அபிவிருத்தி அமைப்புடன் மத்திய வங்கியுடன் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்ட அபிவிருத்தி நிதித்திணைக்களம், கடனில் 60சத வீதம் வரையில் உத்தரவாதங்களை சிறிய நடுத்தர கைத்தொழில் திட்டம் (1) இன் கீழ் நிர்ணயிக்கப்பட்ட ரூ. 400,000க்கெதிராக ஆகக் கூடியது ரூ. 800,000 வரையில் தொடர்ந்து வழங்கும். பங்கு பற்றும் நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் முடிவெடுக்கப்பட்டுள்ளதுடன் இத்திட்டத்துக்கான தொழிற்பாடுகள் 1982 இன் தொடக்கப் பகுதியில் தொடங்கும்.

## கிராமியக் கொடுகடன்

நாணய விதிச்சட்டத்தின் பிரிவு 33 இன் கீழ் நாணயச்சபை 1981 திசெம்பர் 1 ஆம் நாளிலிருந்தும் புதிய கிராமியக் கொடுகடன் திணைக்களத்தை மத்திய வங்கியில் ஏற்படுத்தியது. இவ்வபிவிருத்தியின் குறிப்பிடத்தக்க விடயம் யாதெனில் வங்கித் தொழில் முறையூடாக கிராமியத்துறையில் கொடுகடனின் இயக்கத்தை நெறிபடுத்தலுக்கும் கட்டுப்படுத்தலுக்குமான பெரும் பொறுப்பை மத்திய வங்கி ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதேயாகும்.

இப்புதிய திணைக்களம் ஏற்படுத்தப்பட்டதும் கிராமியக் கொடுகடன் கிராமிய அபிவிருத்தி ஆகியவற்றுடன் தொடர்பாக முன்னைய கிராமியக் கொடுகடன், அபிவிருத்தி நிதித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து தொழிற்பாடுகளும் இத்திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டன, இதன் நடவடிக்கைகள்;

1. பல்வேறு அமைச்சுக்களினுல் ஒப்புதலளிக்கப்பட்ட திட்டங்களின் கீழ் வேளாண்மை, கடற்ருெழில்களுக்கு வழங்கப்பட்ட கடன்களுடன் தொடர்பான நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் (நநீகொநி) தொழிற்பாடுகள்,
2. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடனுன கிராமியக் கொடுகடன் செயற்றிட்டத்தின் செயற்பாடு,
3. கிராமியக் கொடுகடன் மீதான தேசிய கொள்கை நெறிமுறைகளின் அமைப்பு வேலைகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை தயாரிப்பதுடன் இதே விடயங்களை, வர்த்தக வங்கிகளின் கிளைகள், ஏனைய கடன் வழங்கல் முகவர் நிலையங்கள் ஆகியவற்றில் இதன் பரிசோதனைகள், காலத்திற்குக்காலம் இதனுல் நடத்தப்பெற்ற ஆய்வரங்குகள், மாநாடுகள் ஆகிவற்றின் மூலம் பெறப்பட்ட சரியான விடயங்களின் மீது தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்தல் அத்துடன்,
4. கிராமியக் கடனுடன் தொடர்பான வங்கிகள் ஏனைய கொடுகடன் முகவர் நிலையங்களின் தொழிற்பாடுகளை இணைத்தல்

ஆகியவற்றை உள்ளடக்கும்

**கிராமியக் கொடுகடன் மதியுரைச்சபை**

மீளாய்விற்குரிய ஆண்டில், இலங்கையில் கிராமியக் கொடுகடன் தொழிற்பாடுகளுக்கான தேசிய கொள்கைநெறி முறைகளை அமைக்கும் நோக்கத்திற்காக 1980 ஆம் ஆண்டில் நிதி திட்டமிடல் அமைச்சரினுல் ஏற்படுத்தப்பட்ட கிராமியக் கொடுகடன் மதியுரைச்சபையின் முதலாவது கூட்டத்தைத் திணைக்களம் கூட்டியது. இச்சபையின் நோக்க எல்லைக்குள்வரும் தொழிற்பாடுகள்-

i. நாட்டிற்குப் பொருத்தமானதும் வலிவுள்ளதுமான கிராமியக் கொடுகடன் அமைப்பிற்கான நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தல்.

i. கிராமியக் கொடுகடனையும், கிராமிய அபிவிருத்தியையும் மேற்கொள்ளும் பல்வேறுபட்ட முகவர் நிலையங்களுக்கிடையில் தொடர்பையும் உறவு நிலைத் தொழிற்பாடுகளையும் நிர்ணயித்தல்.

ii. கிராமியக் கொடுகடன் மீதான தேசிய கொள்கை நெறிமுறைகளின் அமைப்பு வேலைகளுக்கு அத்திவாரமிடல்.

v. வேளாண்மை அதனேடிணைந்த துறைகளுக்கான கடன் வழங்கல் தொடர்பாக இலங்கை மத்திய வங்கியிலிருந்தான மீள் நிதியிடலின் அளவு தன்மை பற்றித் தீர்மானித்தல்

v. இலாபமடையாத வேளாண்மையாளர்களுக்கு நிதியிடல் எவ்வழிமூலம் எந்த முகவர்களால் வழங்குவது எனத் தீர்மானித்தல்.

vi. சிறு வேளாண்மையாளர்களுக்குப் போதுமான கொடுகடன் வழங்கலை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான கொள்கை வழிமுறைகளைப் பரீட்சித்தல், அத்துடன்;

ii. செயற்பாட்டின் கீழுள்ள பல்வேறு அபிவிருத்தித்திட்டங்களில் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளும் மீளாய்வு அட்டவணையின்படி செயற்பாட்டுடன் காரணிகளைக் கவனத்திற்கொள்ளல், தடைகளை நீக்குவதற்கு பொருத்தமான கொள்கை வழிமுறை ஆலோசனைகளை வழங்கல் ஆகியவற்றை உள்ளடக்கும்.

1981ஆம் ஆண்டுக்காலகட்டத்தில்சபைநான்கு கூட்டங்களை நடத்தியது. வங்கித் தொழில் முறையின் கிராமியக் கொடுகடன் தொழிற்பாடுகளைப் பாதிக்கும் முக்கிய கொள்கை மாற்றங்கள் செயற்படுத்தலுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டன. 1977 சனவரி 1ஆம் நாளிலிருந்து 1981 யூன் 30ஆம் நாள் வரையுள்ள காலப்பகுதியில் வேளாண்மையாளர்களுக்கு வழங்கப்பட்ட தற்போதுள்ள கடன்களை மீள அட்டவணையிடுவதற்கு முடிவெடுக்கப்பட்டது. கிராமியக் கொடுகடன் மதியுரைச்சபையினல் எடுத்துரைக்கப்பட்ட மீள் அட்டவணையிடல் திட்டம் வேளாண்மையாளர்களுக்கு நிவாரணத்தையும் அவர்களாகவே புத்தாக்கத்தைப் பெறுவதற்கான சந்தர்ப்பத்தையும் வழங்குவதால், அதன் மூலம் புதிய கடன்களுக்குத் தகைமை உடையவர்களாகின்றூர்கள். மேலே குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் வழங்கப்பட்ட அனைத்துக் கடன்களையும் ஒரு கடன் வடிவில் ஒன்று திரட்டுவதற்கான வசதியை இத்திட்டம் வழங்குகின்றது. இக்கடன்களின் திரட்டலுக்கு தண்டவீத வட்டி விதிக்கப்படமாட்டாது. 1981 யூன் 30 ஆம் நாள்வரை வெளிநின்ற தொகையின் மீது 9 சதவீத வட்டி சேர்க்கப்படும். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தவிரும்பும் வேளாண்மையாளர்கள் ஒன்று திரட்டப்பட்ட கடனில் 10 சதவீதத்தையும் மிகுதியை 5 ஆண்டு காலத்தில் 10 அரையாண்டுத் தவணைகளில் செலுத்தவேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்படுவார்கள். ஒவ்வொரு கடன்தவணைக் கட்டணமும் பருவகாலத்துடன் தொடர்புடையதாக இருக்கும். தண்ணீர்ப் பற்றுக்குறை காரணமாக இருபோகப் பயிர்ச்செய்கை சாத்தியப்படாத பகுதிகளில் 10 ஆண்டுகளை விஞ்சாத முறையில் மீளச் செலுத்தும் காலப்பகுதியை நீடிப்பது பற்றி வங்கிகள் தீர்மானிக்கலாம். ஒழுங்கான மீள் கொடுப்பனவுகளை ஊக்குவிப்பதன் பொருட்டு குறிப்பிட்ட நாட்களில், முதல் 7 தவணைக்கட்டணங்களும் மீளச் செலுத்திய வேளாண்மையாளர்களுக்கு ஒன்றுதிரட்டிய கடனின் மீது இறுதி மூன்று தவணைக்கட்டணங்களும் பதிவழிக்கப்படுகின்ற சலுகை வழங்கப்படும். இத்திட்டத்தைப் பயன்படுத்தி தாமாகவே புத்தாக்க நிலையை அடையவிரும்பாத வேளாண்மையாளர்கள் வேண்டுமென்றே செலுத்தத்தவறியவர்களாகக் கருதப்படுவதுடன், இக்கடன்களை மீளப்பெறும் பொருட்டு அவர்களுக்கெதிராகச் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும். அத்துடன் வங்கி முகாமையாளர்களின் கருத்துப்படி தற்போதுள்ள கடனை வேண்டுமென்றே செலுத்தத்தவறியவர்களெனக் கருதுகின்ற எந்த ஒரு வேளாண்மையாளர்களுக்கும், எடுத்துக்காட்டாக மீளச் செலுத்துவதற்கான இயலாற்றல் இருந்தும் வங்கிக்கான தமது கட்டுப்பாடுகளை மதிப்பதற்கு விரும்பாத வேளாண்மையாளர்களுக்கு மீள் அட்டவணையிடப்படுகின்றவசதிகளை மறுப்பதற்கான தற்றுணிவு வங்கி முகாமையாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. திட்டத்தின் கீழ் ஒரு வேளாண்மையாளர் மீள அட்டவணைப்படுத்தலுக்கு வங்கியால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பாராஞல் அவரும் 1982 சிறுபோகப் பயிர்ச்செய்கைக்கான செலவை ஈடுசெய்வதற்கு இரண்டு அரச வங்கிகளினதும் அனைத்தையும் உள்ளடக்கிய வேளாண்மை கொடுகடன் திட்டத்தின்கீழ் புதிய கடனுக்குத் தகைமையுடையராவார். இத்திட்டம் 1981 செத்தெம்பரில் மன்னூர், முல்லைத்தீவு, அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் பெரும்போக காலத்துடன் பொருந்தத்தக்கதாக இலங்கை வங்கியினல் அறிமுகம் செய்யப்பட்டது. இத்திட்டம் 1982 சிறுபோகத்துடன் பொருந்தத்தக்கதாக தீவுமுழுவதும் அறிமுகம் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**இலங்கை கிராமியக் கொடுகடன் செயற்றிட்டம்-ஆசிய அபிவிருத்தி வங்கி**

கிராமியக் கொடுகடன் செயற்றிட்டத்தின் செயற்படுத்தலுடன் தொடர்புபட்ட வேலை 1981 இல் விரைவாக முன்னேற்றமடைந்தது. இக்கடன் உடன்படிக்கை 1980 பெப்புருவரி 22 ஆம் நாள் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கைச்சாத்திடப்பட்ட இக்கடன் ஐக்கிய அமெரிக்க டொலர் 109 இலட்சம் வரையான உதவிகளை வழங்கும். ஆண்டிற்கு 1 சதவீதம் கொண்ட பணிக்கட்டணம் மீளப்பெறப்பட்ட கடன் தொகைமீதும் வெளிநிற்கும் தொகைமீதும் செலுத்தப்படவேண்டும்.

10 ஆண்டுச் சலுகைக் காலத்தின் பின்னர் தொடங்கும் மீள்கொடுப்பனவுகளுடன் 40 ஆண்டுக் காலத்தில் கடன் மீளச் செலுத்தப்படவேண்டியதாகும். இக்கடன் தொகை செயற்றிட்டப்பகுதியில் பண்ணை பொறிக் கருவியின் கிடைப்பனவு, குழாய்க்கிணறுகள், அகழப்பட்ட கிணறுகள் மூலமாக நில அடி நீரின் பயன் பாட்டை ஊக்குவித்தல் போன்றவற்றின் பயன்பாட்டு முன்னேற்றத்திற்கும் அத்துடன் வேறுபட்ட உதவிகள் கிராம அபிவிருத்திக்கு உதவுவதற்கான பயிற்சி, உருவமைப்பு போன்றவற்றை உள்ளடக்கிய துணைவசதிகளுக்கும் இக்கடன் தொகை பயன்படுத்தப்படும். கடன்தொகை பின்வரும் செயற்றிட்டக் கூறு களின் செலவுகளை ஈடுகட்டுவதற்கும் பயன்படுத்தப்படும்.

| | வகை | ஒதுக்கப்பட்ட தொகை '000 ஐ. அ. டொலர்கள் |
|---|---|---|
| 1. | பண்ணை பொறிக்கருவி | 4,997 |
| 2. | நீர்ப்பாசன வசதிகள் | 1,069 |
| 3. | அரிசி குற்றும் வசதிகள் | 787 |
| 4. | ஆதரவுப் பணிகளும் வசதிகளும் | 226 |
| 5. | பாரமிழுக்கும் விலங்குகளுக்கான உள்நாட்டுச் செலவு | 800 |
| 6. | கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சி கல்லூரி | 499 |
| 7. | ஒதுக்கப்படாதது | 2.552 |
| | | 10,900 |

செயற்றிட்டப்பரப்பு இலங்கையின் வரட்சி இடைநிலை வலயங்களிலுள்ள அம் பாறை, பதுளை, மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை, யாழ்பாணம், மன்னார் பொலன்னறுவை, புத்தளம், திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியிருந்தது.

கடந்த ஆண்டில் மத்திய வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி அலுவலர் களுக்கு வெளிநாடுகளில் கிராமியக் கொடுகடன் கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங் களில் பயிற்சியளிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியினால் பொறுப்பேற்கப்படவிருக்கும் பாட நெறிகளின் அமைப்பு பாடவிதானம், நிகழ்ச்சித்திட்டங்களில் உதவுவதற்காக வெளிநாட்டிலிருந்தும் மதியுரையாளர்களை ஆட்சேர்ப்புத் தொடர்பான ஆயத்த வேலைகள் மீளாய்விற்குரிய ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. ஆண்டின் முதலரைப் பகுதியில் மதியுரையாளர்கள் இவ்வேலையை பொறுப்பேற்பதை இயலச்செய்வதற் காக மதியுரையாளர்களின் தெரிவு 1982 ஆம் ஆண்டின் முற்பகுதியில் மேற்கொள் ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### கொடுகடன் திட்டங்கள்

மீளாய்விற்குரிய ஆண்டில் மேலும் ஐந்து கொடுகடன் திட்டங்கள் மத்திய வங்கியின் மீள் நிதியிடலினால் ஆதரவளிக்கப்பட்டன. கடந்த ஆண்டின் இறுதியில் இருந்த 12 கொடுகடன் திட்டங்களுக்கு (இவற்றின் விபரங்கள் அட்டவணை 2.9 இல் காட்டப்பட்டுள்ளன) மீள் நிதியிடல் வாயிலாக ரூ. 3342 இலட்சங் கொண்ட மொத்தத்தொகை ஒதுக்கப்பட்டபோதும் இதில் ரூ. 931.6 இலட்சம் மட்டுமே பயன்படுத்தப்பட்டது. ஆண்டுக்காலத்தில் பயன்பாடு ரூ. 1845.6 இலட்சங்களுக்கு அதிகரித்து, பயன்படுத்தப்படாத நிலுவையாக ரூ. 1496.4 இலட்சம் விடப்பட் டது. இவ்வாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட ஐந்து புதிய கொடுகடன் திட்டங்களு டன் மொத்த ஒதுக்கீடுகள் ரூ. 4570.7 இலட்சங்களுக்கு அதிகரித்தது. இவ்வாண் டில் இக்கொடுகடன் திட்டங்களின்கீழ் கடன் பகிர்ந்தளிப்புக்கள் இருக்கவில்லை. இதன் விளைவாக பயன்படுத்தாத நிதியின் தொகை ரூ. 2725.1 இலட்சங்களுக்கு

அதிகரித்தது. இக்கொடுகடன் திட்டங்கள் சிலவற்றின் விரைவான செயற்படுத்தலுக்கான தடைகளை, முட்டுக்கட்டைகளை நீக்குவதன்பொருட்டு கொள்கை வழிமுறைகள் எடுக்கப்பட்டிருப்பதனுல் 1982 ஆம் ஆண்டுக் காலத்தில் பல்வேறு திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் நிதியில் விரைவான எடுப்பனவு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அட்டவணை 2.9 ஒவ்வொரு திட்டத்தின்கீழும் ஒதுக்கப்பட்ட, செலவழிக்கப்பட்ட தொகையின் தொகுப்பைத் தருகின்றது.

அட்டவணை 2.9

**அமைச்சுக்களினுல் ஆதரவளிக்கப்பட்டு மத்திய வங்கியின் மீள் நிதியிடல் திட்டத்தின் வகை 1இன் கீழ் நாணயச் சபையினுல் மீள் நிதியிடலுக்காக ஒப்புதலளிக்கப்பட்ட கடன் திட்டங்கள்**

| கடன் திட்டத்தின் பெயர் | மீள் நிதியிடல் ஒதுக்கீடுகள் ரூ.ப.இ. | 31.12 1981இல் பயன்படுத்தப்பட்ட தொகை ரூ.ப.இ. | 31.12 1981இல் பயன்படுத்தப்படாத தொகை ரூ.ப.இ. | செயற்றிட்டம் தொடங்கிய நாள் | ஒதுக்கீடுகளின் பங்கீட்டுக்கான காலப் பகுதி ஆண்டுகள் |
|---|---|---|---|---|---|
| அ. 1981ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கொடுகடன் திட்டங்கள். | | | | | |
| 1. ஒகிட் மரச் செய்கை இலங்கை வங்கி/வரையறுக்கப்பட்ட இலங்கை புகையிலைக் கூட்டு நிலயத்திற்கானகொடுகடன் திட்டம் | 4.50 | 2.50 | 2.00 | 3.1.79 | 3 |
| 2. தெங்கு வளமாக்கிக் கொடுகடன் திட்டம் | 55.00 | 41.20 | 13.80 | 26.3.79 | 3 |
| 3. கடற்றெழில்துறை வங்கி நிதியிடல் திட்டம் ... | 10.70 | 98.20 | 8.80 | 2.7.79 | 3 |
| 4. குளநீர்ப்பாசனப் புத்தாக்கப்படுத்தல் செயற்றிட்டம் | 7.70 | 7.70 | — | 2.6.79 | 1 |
| 5. நுவரெலியா மாவட்டத்தில் பாற்பண்ணை அபிவிருத்திக்கான கடன் திட்டம் .. | 10.00 | 3.48 | 6.52 | 28.10.79 | 3 |
| 6. குருநாகல் மாவட்டத்திற்கான ஒருங்கிணைக்கப்பட்ட கிராம அபிவிருத்திச் செயற்றிட்டத்திற்கான பண்ணைப் பொறிகள் கடன் ... | 40.00 | 26.30 | 13.70 | 22.8.79 | 5 |
| 7. சம்மாந்துறைத்தொகுதியின் பாற்பண்ணை அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கான கடன் திட்டம் ... | .12 | — | .12 | 27.11.79 | 3 |
| 8. மகாவலி செயற்றிட்டப்பகுதியில் குடியேறியவர்கள் இழுபொறிகளைக் கொள்வனவு செய்வதற்கு உதவும் கொடுகடன் திட்டம் ... | 55.00 | 5.12 | 49.88 | 19.11.79 | 3 |
| 9. உள்நாட்டுக் கடற்றெழில் வங்கி நிதியிடல் திட்டம் ... | 5.20 | .02 | 5.18 | 29.8.80 | 2 |
| 10. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினுல் நிறுவப்படும் வளமாக்கிக் களஞ்சியங்களுக்கான கொடுகடன் திட்டம் ... | 11.50 | — | 11.50 | 13.10.80 | 1 |
| 11. அபுதாபியினுல் நிதியளிக்கப்பட்ட வடமேற்குக் கரைக் கடற்றெழில் அபிவிருத்தித் திட்டம் ... | 60.00 | — | 60.00 | 13.10.80 | 3 |
| 12. ஒகிட் பயிர்ச் செய்கை மக்கள் வங்கி சர்வோதயம், லக்சலவிற்கான கொடுகடன்திட்டம் ... | 3.00 | .04 | 2.96 | 10.12.80 | 5 |
| (ஆ) 1981ம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன் திட்டங்கள் | | | | | |
| 1. கடற்றெழில் கூட்டுறவு நிலயங்களுக்கான கொடுகடன்கள் ... | 38.00 | — | 38.00 | 28.4.81 | 2 |
| 2. மாத்தளை, புத்தளம் மாவட்டங்களின் இணைக்கப்பட்ட கிராம அபிவிருத்திச் செயற்றிட்டம் ... | 54.79 | — | 54.79 | 8.5.81 | 6 |
| 3. காற்றுடி நிதியிடலுக்கான கொடுகடன் திட்டம் ... | 2.56 | — | 2.56 | 11.12.81 | 1 |
| 4. மாத்தறை மாவட்டத்தில் சுயவேலைவாய்ப்புத் திட்டம் ... | 2.7 | — | — | 10.4.81 | |
| 5. இறடம்பொல-உடஎபெறக்கா கிராம பொறுப்பேற்றல் திட்டம் ... | — | — | — | 16.3.81 | |
| மொத்தம் ... | 457.07 | 184.56 | 272.51 | | |

## கிராமிய வங்கித் தொழிலும் அலுவலர் பயிற்சியும்

கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி 1981 செத்தெம்பர் 15 ஆம் நாள் தொடக்கப்பட்டது. வங்கித்தொழில் துறையில் அலுவலர்க்கு பயிற்சி அளிப்பதும், வேளாண்மைக் கொடுகடன் தொழிற்பாடுகளுடன் தொடர்புபட்ட ஏனைய முகவர்நிலையங்களுக்கு அலுவல்களை விரிவுபடுத்துவதுமே இக்கல்லூரியின் முதன்மைநோக்கமாகும். பயிற்சி, வேளாண்மை, கைத்தொழில் நிதி, கிராமிய வங்கித் தொழில், வர்த்தக வங்கித்தொழிலும் வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடு களும், பன்னாட்டு வங்கித் தொழில், பொருளியல், வரவு-செலவும் கொடுகடன் திட்டமிடலும், மனித வலுத் திட்டமிடல், ஆளணி முகாமையும் நிருவாகமும் கணக்குகள், பதிவேடுகளின் பேணல், கணக்காய்வும் வங்கிப்பரிசோதனையும், செயற்றிட்டமும் கடன்மதிப்பீடும், தரவுமுகாமை ஆகியவற்றை உள்ளடக்கும். வங்கித் தொழிலுடன் தொடர்புள்ள விடயங்களில் பயிற்சி வழங்கப்படும்.

இம்முக்கியவிடயங்களுடன், வங்கித்துறையுடன் தொடர்புடைய சிறப்புத் தலைப்புக்களின் மீது குறுங்கால ஆய்வு அரங்குகளும் ஒழுங்குசெய்யப்படும். பயிற்சிக் கான புதிய விடயங்கள் காலத்திற்குக்காலம் அதிகரிக்கப்படும்.

1981 செத்தெம்பர்-திசெம்பர் காலப்பகுதியில் கல்லூரியினால் பின்வரும் ஆய் வரங்குகளும், பயிற்சி நெறிகளும் ஒழுங்குசெய்யப்பட்டதுடன் இவற்றில் சில ஏனைய வங்கிகளினதும் நிறுவனங்களினதும் இணைந்த ஆதரவில் நடைபெற்றன.

1. நிறைவேற்று அபிவிருத்திப்பாடநெறி/தொழிற்கூடம்.
2. சிறிய அளவு வேளாண்மைச் செயற்றிட்டத்தை அடையாளம் காணல், பயிற்சிப்பாடநெறியை ஒழுங்கு அமைத்தலும் மதிப்பிடலும்.
3. ''நம்பிக்கை நிதிய அலகும் சொத்துப்பட்டியல் முகாமையும்'' என்பதன் மீதான ஆய்வரங்கு.
4. ''வேளாண்மைக் கடனின் மீளளிப்புகள்'' மீதான ஆய்வரங்கு.
5. ''வெளிநாட்டுச் செலாவணி நிலைமைகளின் முகாமை'' ஆய்வரங்கு/ தொழிற்கூடம்.
6. ''குத்தகைமுறை'' மீதான ஆய்வரங்கு.
7. ''வேளாண்மைக்கடனின் மீளளிப்புக்கள்'' மீதான ஆய்வரங்கு (சிங்களத் தில்)
8. ''1982 வரவுசெலவுத்திட்டம்'' மீதான ஆய்வரங்கு.
9. ''சிறிய கைத்தொழிலாளர்களுக்கான நடைமுறைகளும் வசதிகளும்'' மீதான ஆய்வரங்கு.

## பொருளாதார ஆராய்ச்சி

கடந்த ஆண்டுகளைப்போன்று பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் 1981ஆம் ஆண்டில் பொருளாதாரத்தில் வேறுபட்ட துறைகளின் செயற்பாடுகளை வழிநடத்துபவராகவும் மீளாய்வுசெய்பவராகவும் தொடர்ந்திருக்கின்றது. குறிப்பாக நாணய வங்கித் தொழில் அபிவிருத்தி, இறை அபிவிருத்திகளும் சென்மதி நிலு

வைகளும் செலாவணி வீத அபிவிருத்திகள் ஆகியன திணைக்களத்தின் நெருங்கிய நுண்ணாய்வினைப் பெற்றன. அத்துடன் திணைக்களம், பொருளாதார சமூகச் செலவுகள், குடித்தொகை மனிதவலுச்சிக்கல்கள் போன்ற புறக்கணிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பானவற்றில் ஆய்வுகளைத் தொடங்கியது.

மீளாய்விற்குரிய ஆண்டில் பணமும் வங்கித்தொழிலும், வர்த்தகம், வேளாண்மை கைத்தொழில், அரசநிதி போன்ற முக்கிய துறைகளை உள்ளடக்கிய 23 ஆராய்ச்சிச் செயற்றிட்டங்கள் முற்றுப்பெற்றன. குறிப்பாக பெருந்தோட்டத் துறையின் சிக்கல்கள், பொருளாதார சமூகச்செலவுகளில் முதலீடு, தொடர்ந்து செல்லும் பணவீக்கச் சிக்கல்கள் ஆகியன ஆராய்ச்சிநிகழ்ச்சித்திட்டத்தில் உயர்ந்த முன்னுரிமையைப் பெற்றன. முற்றுப்பெற்ற சில ஆராய்ச்சி ஆய்வுகளின் கண்டுபிடிப்புக்கள் ''அலுவலர் ஆய்வுகள்'' என்ற பெயரில் வெளியிடப்பட்டன.

### நாணயக்கொள்கை

1981ஆம் ஆண்டுக் காலத்தில் நாணயக் கொள்கை ஊக்குவிப்பு நடவடிக்கை நாணய வங்கித் தொழில் அபிவிருத்தி ஆகிய திணைக்களத்தின் நிலையான மீளாய்விற்கு உட்பட்டிருந்தது. ஆண்டு காலத்தில் பல நாணயக் கொள்கைமாற்றங்கள் ஏற்பட்டதுடன் அத்தகைய கொள்கை மாற்றங்களை ஏற்படுத்துகின்ற பின்னணியில் தொடர்புபட்டதாகவும் இருந்தது. 1981 மேயில் அறிமுகப்படுத்தப்பட்ட கொடுகடன் கட்டுப்பாடு 1981 யூனில் கூடிய வரையில் வழமையான கொள்கை வழிமுறைகளினல் அகற்றப்பட்டது. 1981 ஓகத்தில் உயர்ந்த வங்கிவீதம், தண்ட வீத சுமையை மிதமாக்கியமை ஆகியவற்றின் மூலம் நாணயக் கொள்கை மீண்டுமொருமுறை தீவிரமாக்கப்பட்டது.

### கொடுகடன் திட்டம்

தேசிய கொடுகடன் திட்டத்தைத் தயாரிக்கும் நோக்குடன் ஆளுநரால் நியமிக்கப்பட்ட கொடுகடன் திட்டக்குழுவிற்கும் திணைக்களம் உதவியது. 1981ஆம் ஆண்டிற்கான கொடுகடன் திட்டம் வடிவமைக்கப்பட்டதுடன் 1981இன் நான்காம் காலாண்டுப்பகுதியில் 1982இற்கான கொடுகடன் திட்ட அடிப்படை வேலைகளைத் தயாரிப்பதில் திணைக்களம் ஈடுபட்டிருந்தது.

### பன்னாட்டு நாணய நிதி ஆலோசனைகள்

மீளாய்விற்குரிய ஆண்டில் பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்தான மூன்று தூதுக்குழுக்களுக்கும் திணைக்களம் பணியாற்றியது. கலந்துரையாடல்களை ஒழுங்குபடுத்தல், இணைத்தலுடன் நிதியத்தினல் வேண்டப்பட்ட புள்ளிவிபரங்களையும் திணைக்களம் வழங்கியது. இவ்வாண்டில் புத்தாக்க அபிவிருத்திக்கான பன்னாட்டு வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற ஏனைய பன்னாட்டு முகவர் நிலையங்களிலிருந்தான தூதுக்குழுவுக்கும் திணைக்களம் பணியாற்றியது.

### வெளியீடுகள்

திணைக்களம் அதன் வழமையான வெளியீடுகளான ஆண்டறிக்கை — 1980 பொருளாதார மீளாய்வு — 1980, மாதாந்தச் செய்தித்திரட்டு, அலுவலர் ஆய்வுகள் தொகுதி 9 எண்கள் 1, 2 ஆகியவற்றை வெளியிட்டது. பெருமளவு எண்ணிக்கைகொண்ட முக்கியத்துறைகள், பொருளாதாரத்தின் பண்பு ஆகியவற்றின் மீதான அண்மைய தகவல்களை உள்ளடக்கிய தெரிந்தெடுக்கப்பட்ட பொருளாதாரக் குறிகாட்டிகள் மாதாந்தம் வழங்கப்பட்டதுடன் வெளியீட்டிலுள்ள புள்ளிவிபரத் தரவுகளுக்கும் திணைக்கள அலுவலர்கள் பொறுப்பாயிருந்தார்கள்.

**சிறப்புப் பொறுப்புக்கள்**

''வங்கித்தொழிலில் வாடிக்கையாளர் பணிகள்'' என்ற தலைப்பின்கீழ் புதிய விடயமொன்று 1981இல் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது. மற்றைய விடயங்களுடன் நிதி, ஏனைய உதவிகள் தேவைப்பட்ட ''நலிந்த கைத்தொழில் களின்'' மீதான ஆய்வுகளும் உள்ளடங்கியிருந்தது. அத்தகைய கைத்தொழில் ஒன்றின் அறிக்கை முற்றுப்பெற்றது.

**புள்ளி விபரவியல்**

**நுகர்வோர் நிதியும் சமூகபொருளாதார அளவீடும் 1978/79உம் 1981/82உம்**

வருவாய், தொழில்நிலை ஆகியவற்றின் மீதான முக்கிய பெறுகைகளைக் கொண்டிருக்கின்ற தொடக்க அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டது. செலவினம் முதலீடு சேமிப்புக்கள் ஆகியவற்றினுடன் தொடர்பான தரவுகளின் கணனிச் செய்முறைப்படுத்தலும் 1982 முற்பகுதியில் முற்றுப்பெறவிருக்கிறது.

1981/82க்கான நுகர்வோர் நிதிசமூக பொருளாதாரஅளவீட்டு வெளிக்களவேலை 1981 ஒற்றோபரில் தொடங்கியது. தரவு ஒன்று சேர்ப்பதில் இரண்டு சுற்றுக்கள் முற்றுப்பெற்றிருப்பதுடன் அட்டவணைகள் கணனிச் செய்முறைப் படுத்தலுக்காக அனுப்பப்பட்டு உள்ளன.

**திட்டமிடப்பட்ட முதலீட்டின் அளவீடு**

இவ்வளவீடு ஆண்டு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. திட்ட மிடப்பட்ட முதலீட்டு அளவீட்டின் 1980 ஆம் ஆண்டிற்கான அறிக்கை தற்போது ஆயத்தமாக இருக்கிறது. 1982ஆம் ஆண்டின் திட்டமிடப்பட்ட முதலீட்டுடன் தொடர்பான கேள்விக்கொத்துக்களும் 1981ஆம் ஆண்டின் உண்மையான முதலீடு களும் ஆண்டின் இறுதியில் அஞ்சலில் சேர்க்கப்பட்டன.

**நெல் வேளாண்மையாளர்களிடையேயான கொடுகடன், படுகடன் பற்றிய அளவீடு—1976**

இவ்வளவீட்டின் அறிக்கை வெளியிடப்பட்டது.

**நாடுமுழுவதற்குமான தரவு சேகரிப்புமுறை**

1978ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட நாடு முழுவதற்குமான தரவு சேகரிப்பு முறை 1981இலும் தொடர்ந்தது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் ஏறக்குறைய 220 நுகர்வோர் விடயங்களின் சில்லறைவிலைகள், முதன்மை வேளாண்மை உற்பத்தி களின் உற்பத்தியாளர் விலைகள் நெற்செய்கைக்குப்போகும் உள்ளீடுகள் சில்லறை விலைகள், தேயிலை, இறப்பர், தெங்கு பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைகள், நெல் செய்கைகளில் கூலிவீதங்கள், தேயிலை, இறப்பர், தெங்குச் சிறு உடமைகள் கட்டடவாக்கக் கைத்தொழிலில் ஆகியவற்றின்மீது தரவு சேகரிக்கப்பட்டது. நுகர்வுப் பொருட்கள், வேளாண்மை உள்ளீடுகள் கூலிகள் என்பனவற்றின் கிடைப்பனவையொட்டியும் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. இத்தரவுகள் நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 நகர நிலையங்களிலிருந்து ஒழுங்கான அடிப்படையில் சேகரிக்கப்பட்டன. சேர்க்கப்பட்ட தரவுகள் 'விலைகள் கூலிகள் புள்ளிவிபரவியல்; சில்லறை உற்பத்தியாளர் உள்ளீட்டு விலைகள் கூலிகள்' என்ற வெளியீட்டில் காட்டப் பட்டுள்ளன.

**தாராளமாக்கப்பட்ட இறக்குமதி நிகழ்ச்சித்திட்டத்தை வழிநடத்தல்**

திணைக்களம் இறக்குமதி மேற்பார்வையிடல் மீது திறக்கப்பட்ட கொடுகடன் பத்திரங்களை மாற்றியமைத்தல் கொடுக்கடன் பத்திரங்களுக்கெதிராகப் பெறப் பட்ட உண்டியல்கள் ஆகியவற்றின் மீதான மாதாந்த தரவுகளைப் பெற்று தாராளமாக்கப்பட்ட இறக்குமதி நிகழ்ச்சித் திட்டத்தின்மீது மேற்பார்வையை தொடர்ந்தும் மேற்கொண்டது. தரவுகள் நுகர்வோர் இடைநிலை முதலீட்டுப் பொருட்கள் என்றவகைகளுக்கும் இன்றியமையாததல்லாத விடயங்களை உள் ளடக்கிய அரசு, அரச கூட்டுத்தாபனங்கள், தனியார்துறை என்றவகைகளுக் கும் மேலும் பட்டியற்படுத்தப்பட்டது. இத்தரவுகள் பல்வேறு உரிய அமைச்சுக் களுக்கு ஒழுங்கான அடிப்படையில் கிடைக்ககூடியதாக செய்யப்பட்டன.

**புள்ளிவிபரவியல் வெளியீடு**

*1981ஆம் ஆண்டுக்காலத்தில் பின்வரும் வெளியீடுகள் வெளியிடப்பட்டன.*

1. சமூகப்பொருளாதார தரவு ஏடு — 1981
2. இலங்கையின் பொருளாதார சமூக புள்ளிவிபரவியல் மலர் 3 இதழ் 1,2உம்
3. விலைகள், கூலிகள், புள்ளிவிபரங்கள் — 1980
4. நெல் வேளாண்மையாளர்களிடையேயான கொடுகடன் படுகடன் அளவீடு 1979.

## பொதுப்படுகடன்

மொத்தப் பொதுப்படுகடன் 1981இல் ரூ. 13,343,689,970 ஆல் அதிகரித்தது. நிதியாண்டின் முடிவில் ரூ. 64,399,346,288 ஆக அமைந்து காணப்பட்டது. உள் நாட்டுக் கடனின் அதிகரிப்பு ரூ. 6,448,343,670 ஆகவும், அதே நேரம் வெளி நாட்டுக் கடனின் அதிகரிப்பு ரூ 6,895,346,300 ஆகவும் விளங்கியது. மொத்தப் பொதுப் படுகடனின் அதிகரிப்புக்கு திறைசேரி உண்டியல்கள், ரூபாய்க்கடன்கள், நிருவாகக் கடன்கள், வெளிநாட்டுக் கடன்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கிய காரணமாக அமைந்தது. மத்திய வங்கியின் முற்பணங்கள், வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் என்பன வீழ்ச்சியுற்ற வேளையில் சிறப்புக் கடன்கள் மாற்றமடை யாமல் இருந்தன. பொதுப்படு கடனின் உள்ளடக்கம் அட்டவணை 2.10 காட்டப் பட்டுள்ளது.

## உள்நாட்டுக்கடன்கள்

**அ, ரூபாக் கடன்**

1981 ஆம் நிதியாண்டின் அரசாங்க வரவு செலவுத் திட்டத்தின்படி உள்நாட்டு வங்கியல்லாத மூலங்களிலிருந்து ரூ. 37,500 இலட்சம் கொண்ட தொகையைத் திரட்டலாமென எதிர்பார்க்கப்பட்டது. மாறாக 1980ஆம் நிதியாண்டின் ரூபா 31,000 இலட்சம் கொண்ட தொகை எதிர்பார்க்கப்பட்டது. இவ்வாறு திரட்டப் பட்ட ரூபாக் கடன்கள் ஆண்டுக்கு 16சதவீத வட்டியையும், 3ஆண்டு முதிர்வுக் காலத்தையும் கொண்டிருந்தன.

1981 ஆம் ஆண்டு ரூபாக்கடன்கள் மூலம் திரட்டப்பட்ட மொத்தத் தொகை ரூபா 25,123 இலட்சமாக விளங்கியது. இவ்வாண்டில் இங்ஙனம் பெறப்பட்ட ஒவ்வொரு ரூபாக் கடனினது உதவு தொகையின் விபரங்கள் அட்டவணை 2.11இல் தரப்பட்டுள்ளன. எல்லா ரூபாக் கடன்களும் 1980ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க ஒதுக்கீட்டுச்சட்டத்தின் கீழ் பெறப்பட்டுள்ளன,

அட்டவணையிலிருந்து அவதானித்தவாறு தேசிய சேமிப்பு வங்கியும், கூட்டு முதலீட்டு நிதியும், ஊழியர் சேமநிதியும் ரூபாக் கடன்களின் முக்கிய உதவுநர்களாக விளங்கின. ரூபாக் கடன் திட்டத்துடன் பொதுப் படுகடன் திணைக்களம் ரூபா 4327 இலட்சம் கொண்ட ஐந்து நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபைக் கடன் முறிகளையும் திரட்டியது. ஊழியர் சேமநிதியும், தேசிய சேமிப்பு வங்கியும் முறையே ரூ. 660இலட்சத்தையும், ரூ.567 இலட்சத்தையும் உதவியிருக்கையில், மீதி கூட்டு முதலீட்டு நிதியின் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினுல் பொறுப்பேற்கப்பட்டது. 1980ஆம் ஆண்டுச் செயலாற்றத்துடன் ஒப்பிடுகையில் கடன் கரைப்பு நிதியத்தினுலும், ஊழியர் சேம நிதியினுலும் செய்யப்பட்ட முதலீடுகளில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு ஏற்பட்டிருக்கையில், தேசிய சேமிப்பு வங்கியினுலும், காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினுலும் செய்யப்பட்ட உதவு தொகைகளில் பெருமளவு வீழ்ச்சி ஏற்பட்டது.

அட்டவணை 2-10

பொதுப்படுகடனிடளின் உள்ளடக்கம் — 1980 உம் 1981 உம்

ரூபாய்களில்

| விடயம் | வெளி நிற்கும் 31.12.1980 | வெளி நிற்கும் 31.12.1981 | ஆண்டில் நிகழ்ந்த மாற்றம் |
|---|---|---|---|
| 1. உள்நாட்டுக்கடன் ... | 29,378,845,694 | 35,827,189,364 | + 6,448,343,670 |
| 1, 1. நீண்டகாலக் கடன் ... | 17,938,682,557 | 20,359,819,233 | + 2,421,136,676 |
| அ. ரூபாக்கடன்கள் ... | 17,610,978,400 | 20,025,428,500 | + 2,414,450,100 |
| ஆ. நிருவாகக்கடன்பாடுகள் ... | 327,630,318 | 334.316,894 | + 6,686,576 |
| இ. தேசிய அபிவிருத்தி முறிகள் ... | 73,839 | 73,839 | — |
| 1. 2. குறுங்காலக் கொடுகடன் ... | 11,440,163,137 | 15,467,370,131 | + 4,027,206,994 |
| அ. திறைசேரி உண்டியல்கள் .. | 9,800,000,000 | 13,920,000,000 | + 4,120,000,000 |
| ஆ. வரிஒதுக்குச் சான்றிதழ்கள் ... | 12,525,327 | 10,932,320 | — 1,593,007 |
| இ. மத்திய வங்கி முற்பணங்கள் ... | 1,319,200,000 | 1,228,000,000 | — 91,200,000 |
| ஈ. சிறப்புக்கடன்கள் ... | 308,437,810 | 308,437,811 | (1)* |
| 2. வெளிநாட்டுக்கடன்பாடு ... | 22,276,810,625 | 29,172,156,925 | + 6,895,446,300 |
| 2.1. செயற்றிட்டக்கடன்கள் ... | 6,784,273,556 | 9.232.757.856 | + 2,448,484,300 |
| 2.2. பண்டக்கடன்கள் ... | 11,791,107,119 | 14,054.815,511 | + 2,263,708,352 |
| 2.3. ஏனைய கடன்கள் ... | 3,701,429,910 | 5,884,583,558 | + 2,183,153,648 |
| மொத்தப் பொதுப்படுகடன் | 51,655,656,319 | 64,999,346,289 | + 13,343,689,960 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

இத்தொகை, தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பாகக் கருதப்படக் கூடாது. 31. 12. 1980 இல் வெளி நின்ற தொகை ரூ 30843 811 ஆக இருத்தல் வேண்டுமே அன்றி ரூ 308437810 அல்ல. (எடுத்துக் காட்டாக கிட்டிய முழு எண் தொகையான 308437810.63)

அட்டவணை 2-11

## அரசின் உள்நாட்டுக்கடன் நிகழ்ச்சித்திட்டம் - 1981 இலங்கை அரசின் ரூபாக் கடன்களுக்கான உதவு தொகைகளின் பகுப்பு - 1984 இன் 16% கடன்கள்

| உதவுநர்கள் | தொடர் 'அ' | தொடர் 'ஆ' | தொடர் 'இ' | தொடர் 'ஈ' | தொடர் 'உ' | தொடர் 'ஊ' | மொத்தம் | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. அரசுசார் சேமிப்பு நிறுவனங்கள் | | | | | | | | |
| அ. தேசிய சேமிப்பு வங்கி ... | 55.02 | 14.00 | 23.00 | 167.40 | 26.60 | — | 286.02 | 11.39 |
| 2. நம்பிக்கை உபகார ஓய்வூதிய சேமிப்பு நிதி | | | | | | | | |
| அ. ஊழியர் சேம நிதியம் ... | 182.50 | 194.77 | 232.50 | 115.75 | 289.28 | 6.75 | 1021·55 | 40.66 |
| ஆ. ஏனையவை ... | 1.00 | 1.02 | — | 40.00 | 10.43 | 2.60 | 55.05 | 2.19 |
| 3. இணைந்த முதலீட்டு நிதியம் ... | 230.53 | 190.52 | 243.16 | 175.91 | 171.80 | 2.70 | 1014.62 | 40.39 |
| 4. தேசிய வீடமைப்பு கடன் கரைப்பு நிதியம் ... | .95 | 1.04 | 1.26 | .94 | 1.88 | .27 | 6.34 | .25 |
| 5. காப்புறுதி நிதி | | | | | | | | |
| அ. காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | | | | | | | | |
| ஆ. காப்புறுதிக் கூட்டுநிலையங்கள் ... | 30.00 | 10.00 | — | — | — | — | 40.00 | 1.59 |
| 6. திணைக்கள ஏனைய அலுவலக நிதிகள் ... | — | — | — | — | — | — | — | — |
| 7. களரிகளும் நிறுவனங்களும ... | — | 0.02 | — | — | 0.01 | — | 0.03 | ... |
| 8. வர்த்தக வங்கிகள் ... | — | 88.63 | — | — | — | — | 88.63 | 3.53 |
| 9. மத்திய அரசு ... | — | — | 0.08 | — | — | — | 0.08 | ... |
| 10. தனிப்பட்டவைகள் ... | — | — | ... | — | — | — | — | — |
| மொத்தம் | 500.00 | 500.00 | 500,00 | 500.00 | 500.00 | 12.32 | 2512.32 | 100.00 |

இவ்வாண்டின் போது முதிர்ச்சி பெற்ற ரூ. 97,870,400 கொண்ட நான்கு ரூபாக் கடன்கள் குறிப்பிட்ட கடன் கரைப்புநிதியங்களிலுள்ள பணங்களைப் பயன் படுத்தி மீளச் செலுத்தப்பட்டன. கடன் கரைப்பு நிதியத்தின் மிகையான ரூபா 2,769,092 கொண்ட திரட்டு நிதிக்கு வரவு வைக்கப்பட்ட வேளையில் ரூ. 10,881,909 கொண்ட குறை துணைக் கடன் கரைப்பு நிதியத்திலிருந்தும் நிரப்பப்பட்டது. ரூபாக் கடன் கணக்குகளின் மீதான பொறுப்பிலுள்ள தேறிய அதிகரிப்பு 1981ஆம் ஆண்டுக் காலத்தில் ரூ. 2,414,450,100 ஆக விளங்கியது. பெறப்பட்ட கடன்கள் மீளச் செலுத்தப்பட்ட கடன்களின் விபரங்கள் அட்டவணை 2.12 இல் தரப் பட்டுள்ளன.

அட்டவணை 2-12

1981 ஆம் ஆண்டில் ரூபாக்கடன்களுக்கான மீளளிப்புக்கள்

| கடன் | தொகை | இணைந்த முதலீட்டு நிதியத்தினுல் மீளளிக்கத்தக்க கடன்கரைப்பு நிதிய நிலுவையின் பெறுமதி | முதிர்ச்சி நாள் | மீளளிப்புக்கு முன்னைய நாள் | கடன்கரைப்பு நிதியத்தில் பற்ருக்குறை/மிகை |
|---|---|---|---|---|---|
| 1. 3¼% கடன் 76-81 | 24,860,000 | 27,580,341.15 | 10.02.81 | ... | 2,720,341.15 + |
| 2. 4¼% கடன் 81-85 | 44,702,800 | 37,643,224.98 | 01.11.85 | 01.11.81 | 7,059,575.02 * |
| 3. 4¼% கடன் 81-85 (ஆ) தொடக்கம் | 25,000,000 | 21,177,666.13 | 01.12.85 | 01.12.85 | 3,822,333.87 * |
| 4. 9 % இருப்பு மாற்றம் (இ) தொடர் | 3,307,600 | 3,356,350.64 | 01.12.83 | 01.12.83 | 48,750.64 + |
| மொத்தம் | 97,870,400 | 89,757,582.90 | | | 2,769,091.79 +<br>10,881,908.89 * |

* கடன் கரைப்பு நிதியத்தில் மிகை

\+ முதிர்ச்சிக் கடனின் கடன்கரைப்பு நிதியத்தின் பற்ருக்குறை துணை கடன்கரைப்பு நிதியத்தினுல் ஈடுசெய்யப்படும்.

## ஆ. கடன் கரைப்பு நிதியம்

1981 ஆம் ஆண்டு முடிவில் ரூபாக் கடன்களை மீட்பதற்கென நிறுவப்பட்ட துடன் கரைப்பு நிதியங்களின் பெறுமதி ரூ .6,340,150,618 ஆக விளங்கி இவ் வாண்டில் ரூ. 1,463,522,955 கொண்ட அதிகரிப்பைப் பிரதிபலித்தது.

அதிகரிப்பு பின்வருமாறு ஏற்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. 1981 ஆம் ஆண்டின் கடன்கரைப்பு நிதிய உதவு தொகைகள் | | ரூ. 964,330,608 |
| 2. முதலீடுகள் மீதான வட்டி | | ரூ. 559,831,839 |
| மொத்தம் | | 1,564,162,447 |
| கழிக்குக | | |
| 1. 1981 ஆம் ஆண்டின் கொடுப்பனவிற்காக பயன் படுத்தப்பட்ட தொகை | ரூ. 97,870,400 | |
| 2. 1981 இல் திரட்டிய நிதிக்கு வரவு வைக்கப்பட்ட மிகை | ரூ. 2,769,092 | 100,639,492 |
| 1981 இன் தேறிய அதிகரிப்பு | | 1,463,522,955 |

DISCARDED

இ. நிருவாகக் கடன் பாடுகள்

மத்திய வங்கிக் கூடாக அரசாங்கத்திற்குக் கிடைக்கக் கூடியதாகச் செய்யப் பட்ட இரண்டு கடன்கள் பொதுப்படுகடன் செலவினத்தின் கீழ் நிருவாகக் கடன் பாடுகளின் கீழ் வகுக்கப்பட்டன. இவ்வாண்டின் இறுதியில் நிருவாகக் கடன் பாடுகளின் மொத்த ரூபாப் பொறுப்பு ரூ. *334,316,894* ஆக விளங்கியது.

ஈ. திறைச்சேரி உண்டியல்

இவ்வாண்டுக் காலத்தில் அரசு திறைச்சேரி உண்டியல்களின் ஒப்புதலளிக்கப் பட்ட மேலெல்லை இரண்டு தடவைகள் திருத்தப்பட்டன. ஒவ்வொரு திருத்தத் தின் பின்பும் ஒப்புதலளிக்கப்பட்ட மேலெல்லை திருத்தம் செய்யப்பட்ட நாளு டன் கீழே தரப்பட்டுள்ளன.

| திருத்தப்பட்ட நாள் | அதிகரித்த தொகை | புதிய எல்லை |
|---|---|---|
| | ரூ. ப. இ. | ரூ. ப. இ. |
| *1981—07—08* | *3000* | *13000* |
| *1981—11—24* | *5000* | *18000* |

இவ்வாண்டின் இறுதியில் வழங்கப்பட்டு வெளி நின்ற திறைச்சேரி உண்டி யல்களின் மொத்தத் தொகை ரூ. *139,200* இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டைவிட ரூ. *41,200* இலட்சம் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தது. மத்திய வங்கியின் பங்கான ரூ. *137,610* இலட்சங்களையும் உள்ளடக்கி வங்கித் துறையின் வசமிருந்த திறைசேரி உண்டியல்களின் தொகை ரூ.*137,730* இலட் சங்களாக இருந்தது. *1981* ஆம் ஆண்டு இறுதியில் திறைசேரி உண்டியல் உடமை களின் பகுப்பாய்வு அட்டவணை *2.13* இல் தரப்பட்டுள்ளது. திறைசேரி உண்டி யல்களின் மீதான வட்டி வீதம் மாற்றமின்றி ஆண்டிற்கு *13*சதவீதமாக இருந் தது.

அட்டவணை 2.13

**திறைசேரி உண்டியல்களின் உடமை 1980 உம் 1981 உம்**

| உடமை | 1980 தொகை (ரூ. ப. இ.) | 1981 தொகை (ரூ. ப. இ.) | சதவீதம் |
|---|---|---|---|
| **வங்கித்துறை** | | | |
| 1. மத்திய வங்கி ... | 9,604.5 | 13,760.8 | 98.9 |
| 2. வர்த்தக வங்கிகள் ... | 8.0 | 12.7 | 0.1 |
| | 9,612.5 | 13,773.5 | 99.0 |
| **வங்கியில்லாத்துறை** | | | |
| 1. கடன்கரைப்பு நிதியம் ... | — | — | — |
| 2. ஏனைய நிதிகள் ... | 6.3 | 8.9 | 0.1 |
| 3. சேமிப்பு நிறுவனங்கள் ... | — | — | — |
| 4. காப்புறுதிக் கூட்டு நிலையங்கள் ... | 4.0 | 2·7 | 0.0 |
| 5. கட்டாயச் சேமிப்பு நிதியம் ... | 115.5 | 124.7 | 0.9 |
| 6. ஏனையவை ... | 0.2 | 0.2 | 0.0 |
| | 126.0 | 136.5 | 1.0 |
| **அரச முகவர்கள்** | | | |
| 1. ஊ. சே. நி. ... | 1.5 | 5.0 | 0.0 |
| 2. தேசிய சேமிப்பு வங்கி ... | — | — | — |
| 3. இலங்கைக் கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனம் ... | 60.0 | 5.0 | 0.0 |
| 4. தேசிய அபிவிருத்தி வங்கி ... | — | — | — |
| 5. டயர் கூட்டுத்தாபனம் ... | — | — | — |
| | 61.5 | 10.0 | 0.0 |
| மொத்தம் ... | 9,800.0 | 13,920.0 | 100.0 |

## அட்டவணை 2-14

### பொதுப்படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள்[1]

| படுகடனின் வகை | 1977 | 1978 | 1979 | 1980 | 1981 |
|---|---|---|---|---|---|
| அ. உள்நாட்டுப் படுகடன்: | | | | | |
| 1. ரூபாக்கடன்கள் ... | 689,639,915 | 839,929,008 | 1,028,678,106 | 1,330,288,692 | 1,694,238,933 |
| 2. நிருவாகக் கடன்பாடுகள்2 ... | 31,747,277 | 39,889,369 | 27,552,069 | 15,344,501 | 2,930,074 |
| 3. திறைச்சேரி உண்டியல்கள் ... | 88,847,415 | 173,919,871 | 220,050,000 | 441,282,750 | 1,305,525,000 |
| 4. வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் ... | 1,022,824 | 986,391 | 653,073 | 504,876 | 238,010 |
| துணை மொத்தம் ... | 811,257,431 | 1,054,724,639 | 1,276,933,248 | 1,787,420,819 | 3,002,932,017 |
| ஆ. வெளிநாட்டுப் படுகடன்: | | | | | |
| 1. வெளிநாட்டுக் கடன்கள் ... | 136,207,376 | 285,031,967 | 356,680,312 | 412,528,783 | 712,896,082 |
| அ. ஆ. இரண்டினதும் மொத்தம் ... | 947,464,807 | 1,339,756,606 | 1,633,613,560 | 2,199,949,602 | 3,715,828,099 |
| வெளிநாட்டுக் கடன்களின் மீதான வெ. ச. உ. சான்றிதழ் கொடுப்பனவு ... | 54,622,469 | — | — | — | — |

1. திறைசேரியினால் பெறப்பட்ட தற்காலிக ரூபாக்கடன்பாடுகள் குறுங்கால வெளிநாட்டுக் கடன்கள் ஆகியவற்றின் மீதான வட்டிக் கொடுப்பனவைத்தவிர்த்து.

2. இது கே. எவ். டபிள்யூ. கடன் வ. எல். 556, ஈரான் கடன் ஆகியவற்றைப்பிரதிபலிக்கின்றது. ஈரான் கடன் 1980 இறுதியில் முழுமையாகச் செலுத்தப்பட்டது.

உ. வரி ஒதுக்குச் சான்றிதழ்கள்

வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் வழங்குவதன் மீதான ஒப்புதலளிக்கப் பட்ட மேலெல்லை மாற்றமின்றி ரூ. 7500 இலட்சங்களாக இருந்தது. 1981 ஆம் ஆண்டுஇறுதிவரை வழங்கப்பட்ட வரி ஒதுக்குச் சான்றிதழ்களின் தொகை ரூ. 737,743,600 ஆக இருந்ததுடன், இத்தொகையில் ரூ. 726 811,280 பெறுமதி கொண்ட சான்றிதழ்கள் வரிக் கொடுப்பனவிற்காகவும் ஒப்படைக்கப்பட்டன. ரூ. 10,932,320 தொகை வெளி நின்ற தொகையாக விடப்பட்டது. 1980 ஆம் ஆண்டு இறுதியிலிருந்தது மட்டத்துடன் ஒப்பிடுகையில் இத் தொகை இவ்வாண்டில் ரூ. 1,593,007 கொண்ட வீழ்ச்சியைப் பிரதிபலித்தது.

ஊ. மத்திய வங்கி முற்பணங்கள்

இவ்வாண்டுக் காலத்தில் மத்திய வங்கியினல் அரசிற்கு வழங்கப்பட்ட தற்கா லிக முற்பணங்கள் ரூ. 91,200,000ஆல் வீழ்ச்சியடைந்ததுடன், இம் முற்பணங்க ளின் வெளி நின்ற மொத்தப் பொறுப்பு ஆண்டு முடிவில் ரூ. 1,228,000,000 ஆக விளங்கியது.

வெளிநாட்டுக் கடன்பாடு

1981 ஆம் ஆண்டு முடிவில் நிருவாகக் கடன்பாடுகள் தவிர வெளிநின்ற மொத்த வெளிநாட்டுக் கடன்பாடு ரூ. 29,172,156,925 ஆக விளங்கி இவ்வாண்டில் ரூ. 6,895,346,300 தொகை கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தது. வெளி நாட்டுக் கடன்பாட்டில் உள்ளடக்கிய செயற்றிட்டக் கடன்கள், பண்டக் கடன்கள் ஏனைய கடன்களின் தொகை முறையே ரூ. 9,232,757,856, ரூ. 14,054,815,511 ரூ. 5,884,583,558 ஆகிய தொகைகளைக் கொண்டிருந்தன. 1981 ஆம் ஆண்டில் வெளிநாட்டுக் கடன்களின் கீழ் பதிவு செய்யப்பட்ட கடன்களின் தொகை ரூ. 5,486,693,337 ஆக விளங்கியது. பொதுப்படுகடனின் கீழ் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்களின் பெரும்பகுதி பல்வேறு வெளிநாட்டு நாணயங்களில் இனங்குறிக்கப்பட்டதுடன் ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் வெளிநின்ற வெளிநாட்டு நாணய நிலுவைகள் செலாவணி வீதங்களின் மாற்றங்களுக்கேற்ப மீளப்பெறுமதியிடப்பட்டன. 1981 ஆம் ஆண்டுக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட செலாவணிவீத திருத்தங்களின் காரணமாக தோன்றிய தேறிய மாற்றம் வெளிநாட்டுக் கடன்பாட்டுப் பொறுப்பை ரூ. 2,162,649,159 ஆல் அதிகரித்தது, 1981 நிதியாண்டுக் காலத்தில் இருபத்தியேழு வெளிநாட்டுக் கடன் உடன் படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன. 1980 ஆம் ஆண்டில் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்ட பொழுதும் எட்டு வெளிநாட்டுக் கடன்களின் கீழான எடுப் பனவுகள் தொடங்கவில்லை.

வட்டிக் கொடுப்பனவு

1981 ஆம் ஆண்டின் பொதுப்படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் தொகை ரூ. 3,715,828,099 ஆக விளங்கி 1980 ஆம் ஆண்டைவிட ரூ. 1,515,878,497 கொண்ட அதிகரிப்பைப் பிரதிபலித்தது, கடன்பாட்டுவகை ஒவ்வொன்றின் கீழும் செலுத்தப்பட்ட வட்டி விபரங்கள் அட்டவணை 2.14 இல் எடுத்துக்காட்டப்பட் டுள்ளன.

## அரசுசார்பு நிறுவனங்களால் பெறப்பட்ட கடன்பாடுகள்

### அ. தேசிய வீடமைப்புத் தொகுதிக் கடன் முறிகள்

இவ்வாண்டுக் காலத்தில் ரூ. 10,000,000 கொண்ட தேசிய வீடமைப்புத் தொகுதிக் கடன்கள் மீளச் செலுத்தப்பட்டன. 1981 ஆம் ஆண்டு இறுதியில் வழங்கப்பட்டு வெளிநின்ற தொகுதிக்கடன்கள் முறிகள் ரூ. 66.000,000 ஆக விளங்கியது. தேசிய வீடமைப்புத் தொகுதிக் கடன் முறிகளை மீட்பதற்கென நிறுவப்பட்ட கடன்கரைப்பு நிதியத்தின் ஏறத்தாழ சந்தைப் பெறுமதி 1981 திசெம்பர் முடிவில் ரூ, 36,019,024 ஆக விளங்கியது

### ஆ. நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபை தொகுதிக் கடன் முறிகள்

1981 ஆம் ஆண்டுக் காலத்தில் ரூ. 432,660,000 தொகை கொண்ட நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபைத் தொகுதிக் கடன்கள் வழங்கப்பட்டன. இத் தொகுதிக் கடன் முறிகள் 3 ஆண்டுகள் முதிர்ச்சிக் காலத்தையும் ஆண்டிற்கு 16 சத வீத வட்டியையும் கொண்டிருந்தன.

### இ. அரச ஈட்டு முதலீட்டு வங்கித் தொகுதிக் கடன் முறிகள்

1981 ஆம் ஆண்டுக் காலத்தில் ஒவ்வொன்றும் ரூ. 200 இலட்சம் கொண்ட மூன்று அரச ஈட்டு முதலீட்டு வங்கித் தொகுதிக் கடன்முறிகள் வழங்கப்பட்டன. 1981 ஆம் ஆண்டின் இறுதியில் வழங்கப்பட்டதும் வெளிநின்றதுமான அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் தொகுதிக் கடன் முறிகள் ரூ. 117,250,000 தொகையாக இருந்தன.

## செலவாணிக் கட்டுப்பாடு

### இறக்குமதிகள்

. செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் முன் ஒப்புதல் இல்லாமலே அதிகாரம் பெற்ற வர்த்தகர்களுக்கு க.ஏ.பெ. அல்லது கொ.கா.க. நியதிகளின் மீதான இறக்குமதிகளின் கொடுப்பனவுகளுக்கு பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய கொடுகடன் சான்றிதழ்கள் நிறுவுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

(அ) இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான அல்லது அதன் பட்டயம் பெற்ற கப்பலில் ஏற்றப்படும் பொருட்கள்.

(ஆ) வரையறுக்கப்பட்ட இலங்கை விமான சேவைக்கு சொந்தமான வானூர்தியில் ஏற்றப்படும் பொருட்கள்.

### ஏற்றுமதிகள்

i. 1981ஆம் ஆண்டு மே 2ஆம் நாள் முதல் பன்னாட்டு அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அளவையாளர் நிறுவனத்திடம் அல்லது தேசிய வர்த்தகச் சம்மேளனத்தை சார்ந்த அளவையாளர்கள் குழுவிடமிருந்து பெறப்பட்ட தரச் சான்றிதழ் ஒன்று பின்வரும் தரங்களைக்கொண்ட இறப்பர் ஏற்றுமதி மீது அறிமுகப்படுத்தப்பட்டது.

(அ) ஆர். எஸ். எஸ். தரம் 4.

(ஆ) ஆர். எஸ். எஸ். தரம் 5

ii. 1981ஆம் ஆண்டு ஓகத்து 24ஆம் நாள் முதல் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைய ஆபரணங்கள் / இலங்கையில் தயாரிக்கப்பட்ட இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட ஆபரணங்கள் ஆகியனவற்றின் ஏற்றுமதிக்கான விண்ணப்பங்களை அங்கீகரிக்கும் உரிமை அதிகாரம் பெற்ற வர்த்தகர்களுக்கு அளிக்கப்பட்டது.

### வதிவற்ருேர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்

வதிவற்ருேர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் திட்டத்தில் தற்போது நடைமுறையிலுள்ள விதிகள் பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டன.

i. வதிவற்ருேர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தற்போது வெளிநாட்டில் வதியும் இலங்கையர்களால் அல்லது இலங்கைக்கு திரும்பிய 90 நாட்களுக்குள்ளான காலப்பகுதியில் திறக்கமுடியும்.

ii. கூட்டுக் கணக்குகள் வைத்திருப்பவர்கள் எல்லோரும் மேலேயுள்ள பிரிவு (1) இன் நிபந்தனைகளுக்கு அமைவதன்பேரில் இக்கணக்குகளைக் கூட்டாக வைத்திருக்கமுடியும்.

iii. இக்கணக்குகள் கணக்கு வைத்திருப்பவர்களினுல் எந்நேரத்திலும் மூடப்படலாம். எனினும் கணக்கு வைத்திருப்பவர் இலங்கையில் நிரந்தரமான வதிவிடத்தைப் பெற்ற 10 ஆண்டுகளுக்குள் எவ்வாருயினும் மூடப்படவேண்டும்.

### வதிவிட விருந்தினர் திட்டம்

வதிவிட விருந்தினர், கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவினுல் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களில் முதலீடு செய்வதன்பொருட்டு வெளிநாட்டு நிதியங்களை கொண்டுவருவதற்கு நிதி திட்டமிடல் அமைச்சரினுல் அனுமதிக்கப்பட்டனர்.

### இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்ட கப்பற் பொதிகளின் முகவர் தரகு

கப்பல் முகவர்கள் 1981 பெப்ரவரி 01இலிருந்து "இலவச வெளியேற்றல்" நியதிகளிலுள்ள கப்பற் பொதி தவிர்ந்த இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் எல்லாக் கப்பல் பொதிகளின் மீதும் முகவர் தரகாக $2\frac{1}{2}$ சதவீதத்தைப் பெறுவதற்கு ஒழுங்கு செய்யுமாறு அறிவிக்கப்பட்டனர்.

### கப்பலில் மாற்றி ஏற்றும் கொள்கலங்களின் மீதான முகவர் தரகு

கப்பலில் மாற்றி ஏற்றும் கொள்கலங்களைக் கையாளுவதற்கென பின்வருமாறு முகவர் தரகு பெறுவதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ளும்படி கப்பல் முகவர்கள் அறிவிக்கப்பட்டனர்.

அ. கப்பலில் மாற்றி ஏற்றும் கொள்கலன் ஒன்றுக்கு ஐ. அ. டொலர் 15, குறிப்பிட்டகொள்கலனின் மீதான மொத்தக் கப்பல் கூலியின் 1 சதவீதம் ஆகியவற்றில் உயர்ந்ததை.

ஆ. கப்பலில் மாற்றி ஏற்றும் வெற்றுக் கொள்கலன்களை கையாளுவதற்கு ஆகக்குறைந்தது ஐ. அ. டொலர் 5 ஆகும்.

### வெளிநாட்டு நாணயத்தினை பணமாக மாற்றுதல்

பெறுபவரிடமிருந்து, வெளிநாட்டு செலாவணியின் நோக்கம், மூலம் என்பன பற்றிய தரவுகளைப்பெறுது இலங்கையில் வதிபவர்களால் சமர்ப்பிக்கப்படும் உள்வரும் பண அனுப்பல்களை, பயணிகள் காசோலைகள், நாணயத்தாள்களை ஐக்கிய அமெரிக்க டொலர் 500 வரையிலும் அல்லது அதற்குச் சமமான ஏனைய வெளிநாட்டு நாணயங்களையும் பணமாக மாற்றுவதற்கு அதிகாரம் பெற்ற வர்த்தகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

## ஊழியர் சேமநிதியம்

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது ஊழியர் சேமநிதியத் திணைக்களத்தினூடாக 1958ஆம் ஆண்டின் ஊழியர் சேமநிதியச் சட்டம் விதி எண் 15 இன் 5ஆம் பிரிவின்படி செலுத்தப்படும் எல்லாத் தொகைகளையும் உதவு தொகைகளாகவும் மேலதிகக் கட்டணங்களாகவும் இந்நிதியத்திலிருந்து முதலீடு செய்யப்படும் பணத்திலிருக்து பெறும் வருமானம் அதன் சார்பான ஏனைய செயற்பாடுகள் என்பதின் மூலமும் பெறுகின்றது. 1981 காலப்பகுதிகளில் அதன் நடவடிக்கைகள் சுருக்கமாகக் கீழே தரப்பட்டுள்ளன.

**உதவு தொகைகள்**

1981 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இந்நிதியத்தினுல் பெறப்பட்ட உதவு தொகைகள் 1980 ஆம் ஆண்டின் ரூ. 7,410 இலட்சங்களுக்கெதிராக ரூ. 8,957 இலட்சங்களாக விளங்கியது. இது முன்னைய ஆண்டின் உதவுதொகை மட்டத்தினைவிட ரூ. 1,547 இலட்சங்களால் அல்லது 20.9 சத வீதத்தினுல் அதிகரித்துள்ளமையைப் பிரதிபலிக்கின்றது.

1980 ஆம் ஆண்டு ஊழியர் சேமநிதியத்திற்காக உதவுதொகைகளின் ஆட் குறைந்த வீதங்கள் ஊழியர்களின் உதவு தொகைகளாக ஊழியர்களின் மொத்த வருமானங்களில் 6 சத வீதம் ஆகவும், தொழில் வழங்குநர்களின் உதவு தொகைகளாக ஊழியர்களின் மொத்த வருமானங்களில் 9 சத வீதத்தையும் உள்ளடக்கி ஊழியர்களின் மொத்த வருவாய்களில் 15 சத வீதத்தைக் கொண்டிருக்கிறது. 1981 இல் ஊழியரின் ஆகக் குறைந்த உதவு தொகைகள் 8 சத வீதமாகவும் தொழில் வழங்குநரின் உதவு தொகைகள் 12 சத வீதமாகவும் உயர்த்தப்பட்டு ஊழியரின் மொத்த வருவாய்களில் 20 சத வீதத்தை மொத்தமாக வழங்கியது. உதவு தொகைகளின் வீதத்தில் ஏற்பட்ட 15 சத வீதத்திலிருந்து 20 சத வீத அதிகரிப்பானது உதவு தொகைகளில் 33 1/3 சத வீதமான அதிகரிப்பினை ஏற்படுத்தியதன் விளைவாக 1981 ஆம் ஆண்டின் உதவு தொகைகளின் அளவில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்பட்டது.

பின்வரும் அட்டவணை 1980 ஆம், 1981 ஆம் ஆண்டுகளில் சனவரி—திசெம்பர் காலப்பகுதியில் பெறப்பட்ட உதவுதொகைகளின் ஒப்பீட்டு அடிப்படையிலான கூற்றினைக் காட்டுகின்றது. 1981 ஏப்பிரல் தவிர1981 பெப்புருவரிக்கும் யூலைக்கும் இடையிலான காலப் பகுதியின் பெறப்பட்ட உதவு தொகைகளின் சதவீத அதிகரிப்பு 1980 ஆம் ஆண்டின் மட்டத்தினை விட 33 1/3 சத வீதத்திலும் மிகக் குறைவாக இருந்ததாயினும் 1981 ஏப்பிரலில் சதவீத அதிகரிப்பு 40.60 ஆகவிருந்தது. எனினும் 1981 ஆகஸ்ட் தொடக்கம் ஒத்தோபர் வரையிலான காலப்பகுதியில் பெறப்பட்ட உதவுதொகைகள் 1980 ஆம் ஆண்டின் ஒப்பிடத்தக்க நிலைகளைவிட ஆகக் குறைந்தது 30 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 1981 நவெம்பர், திசெம்பர் காலப்பகுதியில் பெறப்பட்ட உதவு தொகைகள் மீண்டும் ஒரு சிறிதளவான வீழ்ச்சியினைப் பதிவு செய்துள்ளன.

அட்டவணை 2.15

**பெறப்பட்ட மாதாந்த உதவு தொகைகளின் ஒப்பீட்டு அறிக்கை**

(மேலதிகக் கட்டணங்களையும் உள்ளடக்கும்)

| மாதம் | 1980 (ரூபாய்களில்) | 1981 (ரூபாய்களில்) | % அதிகரிப்பு |
|---|---|---|---|
| சனவரி ... | 59,919,005 | 88,861,606 | 48.30 |
| பெப்புருவரி ... | 64,082,536 | 71,864,998 | 12.14 |
| மார்ச்சு .. | 59,670,071 | 72,491,149 | 21.48 |
| ஏப்பிரல் .. | 52,683,439 | 74,075,267 | 40.60 |
| மே ... | 64,026,454 | 67,102,044 | 4.80 |
| யூன் .. | 63,575,370 | 73,725,633 | 15.96 |
| யூலை .. | 67,996,088 | 73,469,813 | 8.05 |
| ஓகத்து .. | 60,400,233 | 83,204,251 | 37.75 |
| செத்தெம்பர் ... | 61,547,179 | 80,345,928 | 30.54 |
| ஒத்தோபர் . | 62,543,157 | 81,627,273 | 30.51 |
| நவெம்பர் ... | 61,700,343 | 75,918,187 | 23.04 |
| திசெம்பர் ... | 72,982,042 | 80,385,316 | 10.14 |

**உறுப்பினர்களின் ஐந்தொகைகள்**

1981 ஆம் ஆண்டின் இறுதியிலான உறுப்பினர்களின் ஐந்தொகைகள் ரூ,55,966 இலட்சங்களாகவிருந்து 1980 ஆம் ஆண்டின் மட்டத்தைவிட ரூ. 9,762 இலட்சங்களால் அல்லது 21.1 சத வீதத்தினுல் அதிகரித்தது.

**முதலீடுகள்**

மீளாய்வுக்குரிய ஆண்டில் இந்நிதியம் 1980 ஆம் ஆண்டின் ரூ. 10,225 இலட்சங்களுக்கு எதிராக ரூ. 11,240 இலட்சங்களை அரச பிணைகளிலும், நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபைகளினுல் வழங்கப்பட்ட தொகுதிக் கடன் முறிகளிலும் முதலீடு செய்தது. இது 1980 ஆம் ஆண்டின் மட்டத்தைவிட ரூ. 1,015 இலட்சங்கள் அல்லது 9.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பாகும். 1981 இறுதியில் ஊழியர் சேமநிதியத்தின் மொத்த முதலீடுகள் ரூ, 59,000 இலட்சங்களாக விளங்கியது.

ஊழியர் சேம நிதிய பணங்களின் முதலீடானது பல காரணிகளில் தங்கியுள்ளது. அவற்றுள் ஒவ்வொரு மாதத்திலும் கிடைக்கப்பெற்ற உதவு தொகைகள் முக்கியமானதொன்ருகும். தொழில்நிலை மட்டம், கூலிவீதங்கள், தொழில் வழங்குநர்களாலும், ஊழியர்களாலும் வழங்கப்பட்ட கூலிகளின் சத வீதம், ஊழியர் சேமநிதிய சட்டத்தின் சிறப்பு விதிகளைத் தொழில் ஆணையாளர் செயற்படுத்தும் அளவினைப்பொறுத்தும் உதவு தொகைகளின் அளவு தீர்மானிக்கப்படுகிறது. குறிப்பிட்ட ஒருகால எல்லைக்குள் ஊழியர் சேமநிதித் திணைக்களத்திற்கு இலங்கை அரச பிணைகளில்முதலிடுவதற்குக் கிடைக்கக்கூடிய நிதியங்கள் மீளளிக்கப்பட்டஊழியர்களின் மொத்தநன்மைகளும்நிதியத்தின் நிர்வாகச்செலவினங்களும் நீங்கலாக உதவுதொகைகளின்மொத்தம் முதிர்ச்சியடைந்த முன்னைய முதலீடுகளின் பெறுகைகள், முதலீட்டு வருமானங்கள் ஆகியனவாகும்.

நாணயச் சபையினுல் நியமிக்கப்பட்ட ஒருகுழு காலத்திற்குக்காலம் இந்நிதியத்தின் முதலீடுகளைப் பல்வகைப்படுத்தும் சாத்தியக் கூறுகளைப் பரிசீலனை செய்கிறது.

**முதலீட்டிலிருந்தான வருமானம்**

1981இல் இந்நிதியத்தின்முதலீடுகளிலிருந்தான வருமானம் 1980ஆம் ஆண்டின் ரூ, 3,516 இலட்சங்களுக்கெதிராக ரூ. 4,862 இலட்சங்களாக இருந்தது. இந்த அதிகரிப்பு முன்னைய ஆண்டினது அதிகரிப்பான ரூ. 828 இலட்சம் அல்லது 30.8 சத வீதத்திற்கெதிராக ரூ. 1,346 இலட்சங்களாக அல்லது38.2 சதவீத மாக விளங்கியது. நிதியத்தினுல் பெறப்பட்ட அதிகரித்த அளவு உதவுதொகைகளின் முதலீடு, கடந்த முதலீடுகளிலிருந்து பெறப்பட்டவருவாயின் மீள் முதலீடு, ரூபாக் கடன்கள் மீதான அதிகரித்த வட்டி வீதம் ஆகியனவே இதற்கு முக்கிய காரணிகளாகவிளங்கின.

**மீளளிப்புக்கள்**

1981 ஆம் ஆண்டில் உறுப்பினர்களுக்கு ஊழியர் சேமநிதியத்தின் மீளளிப்புக்கள் மூலம் வழங்கப்பட்ட மொத்தத்தொகை 1980 ஆம் ஆண்டின் ரூ. 2,054 இலட்சங்களுக்கு எதிராக ரூ. 3,004 இலட்சங்களாக விளங்கியது. 1980 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது ரூ. 950 இலட்சம் அல்லது 46.3 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தது. 1981 ஆம் ஆண்டில் முடிவு செய்யப்பட்ட மீளளிப்பு விண்ணப்பங்களின் எண்ணிக்கை 1980 ஆம் ஆண்டின் 50,968 இற்கு எதிராக 61,969 ஆக விளங்கியது. இது குடிபெயர்ந்து செல்லும் இந்தியக் குடிகளிடமிருந்து பெற்ற 24,630 கோரல்களையும் உள்ளடக்கும்.

ஊழியர் சேமநிதித் திணைக்களம் தன்னிச்சையான அடிப்படையில் குடிபெயர்ந்து செல்லும் இந்தியக் குடிகளின் ஊழியர் சேமநிதித்தொகை மீளளிப்புக்களுக்காக புதிய திட்டமொன்றினை 1976 இல் அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ் குடிபெயர்வோருக்கு அவர்களது ஊழியர் சேமநிதிப்பணம் காசோலையாகச் செலுத்தப்படுவதுடன் இதனை அஞ்சல் மாற்றல்கள் மூலம் இந்தியாவிற்கு நிதியங்களை மாற்றல் செய்வதன் வாயிலாக மட்டுமே மாற்றிக் கொள்ள முடியும். இத்திட்டம் குடிபெயர்பவர்களுக்கு அவர்களுடைய ஊழியர் சேமநிதியப் பணத்தை மிகக் குறுங்காலத்தில் கிடைக்கச் செய்வதை உறுதிப்படுத்தியது.

ஊழியர் சேமநிதியத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட மீளளிப்புக்கள் 1980—1981 காலப்பகுதியில் கணிசமாக அதிகரித்தமை அவதானிக்கப் பட்டது. மீளளிக்கப்பட்ட பணத்தின் தொகையும் இக்காலப் பகுதியில் குறிப் பிடத்தக்களவில் அதிகரித்தது. மீளளிப்புப் பணத்தின் மேல்நோக்கிய போக் கிற்கு, குடிபெயர்ந்து செல்லும் இந்தியக் குடிகளிடமிருந்து பெற்ற கோரல்களின் அதிகரித்த எண்ணிக்கையும் ஒவ்வொரு நிலையிலும் சம்பந்தப்பட்ட நன்மைகளின் அதிகரித்த அளவுமே காரணிகளாக விளங்கின.

**ஊழியர் நிலுவைகளின் மீதான வட்டி**

ஊழியர் சேமநிதியமானது ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் நிதியத்தின் பண முதலீடுகளிலிருந்தான வருமானத்திலிருந்து உறுப்பினர்களின் நிலுவைகளுக்கு வட்டிக் கொடுப்பனவு செய்தல் வேண்டும். உறுப்பினர்களின் நிலுவைகளின் மீது வழங்கப்படவேண்டிய வட்டி வீதம் 1980 ஆம் ஆண்டில் ஆண்டிற்கு 8 சதவீதத்தி லிருந்து 1981 ஆம் ஆண்டில் 8.5 சத வீதத்திற்கு உயர்த்தப்பட்டது. ஆண்டின் இறுதியில் உறுப்பினர் வரவில் வெளிநிற்கும் நிலுவைகளின் மீது வட்டியும் அதன் பின்னர் கூட்டு மொத்தத்தில் வட்டி ஒன்றும் திரட்டப்படுகின்றது. இதனைவிட ஆண்டின் இறுதியில் உறுப்பினர் ஒருவரின் வரவில் வெளிநிற்கும் நிலுவைகளின் பேரில் அந்நிலுவைகளில் ஏதேனும் பகுதி (இது நடைமுறை ஆண்டின் உதவு தொகைகளைக் குறிக்கும்) உறுப்பினரின் வரவிற்கு நிதியினால் பெறப்பட்ட நாளைக் கருத்திற் கொள்ளாது முழுஆண்டிற்கும் வட்டி கொடுக்கப்பட்டது. எடுத்துக் காட்டாக திசெம்பர் மாதத்தில் பெறப்பட்ட உதவு தொகைகள் இவ்வாண்டின் சனவரி மாதத்தில் பெறப்பட்ட உதவு தொகைகளைப்போல முழு ஆண்டிற்கான வட்டியைப் பெறுகின்றது. ஆகவே வட்டியின் பயனுள்ள வீதம் ஆண்டு ஒன்றுக்கு 8.5 சதவீதத்திலும் பார்க்க ஓரளவு உயர்வானதாகும்.

**திணைக்களத்தின் நிருவாகம்**

(அ) மீளாய்விற்குரிய ஆண்டில் திணைக்களம் ''சி'' படிவத்தில் பெயர்களையும் உறுப்பினர் எண்களையும் ஏற்கனவே அச்சிட்டு வழங்கும் முன்னோடிச் செயற்திட் டத்தை அறிமுகப்படுத்தியது. இதன்படி அம்பாந்தோட்டை, மாத்தறை, காலி, நுவரெலியா, மாத்தளை, திருகோணமலை, பொலனறுவை, மன்னார், வவுனியா, அநுராதபுரம், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, சிலாபம், புத்தளம், கண்டி, கம்பஹா, அம்பாறை ஆகிய மாவட்டங்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப் பட்டதுடன் இது எஞ்சியுள்ள மாவட்டங்களுக்கும் விரைவில் விரிவாக்கப்படும்.

(ஆ) நடைமுறைகள் வரையறுக்கப்பட்டதுடன் ஊழியர் சேமநிதி மீளளிப் புக்களை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டது;

(இ) மீளளிப்புக்களில் மேலதிக கொடுப்பனவுகளைத் தவிர்ப்பதற்கு நிருவாக நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

(ஈ) மீளாய்விற்குரிய ஆண்டில் ஊழியர் சேமநிதித் திணைக்களம், கோருநர் களின் சேமிப்பு அல்லது நடைமுறைக் கணக்கில் ஊழியர் சேமநிதிப் பணத்தை நேரடியாக வரவு வைப்பதில் தொழில் ஆணையாளரின் ஆலோசனையுடன் புதிய திட்டத்தைப் பூர்த்தி செய்யக் கூடியதாகவிருந்தது. தற்பொழுது இத்திட்டம் தன்னிச்சையடிப்படையில் இயங்குகின்றது.

(உ) மூலக் கோப்புக்கள் ஆண்டறிக்கைப் பட்டியல், தனிப்பட்ட தொழில் நிலை ஏடுகள் என்பவற்றை நுண்ணொளி புகைப்படமாக்குவதை மேற்கொள்ளு மாறு முகாமைக் கணக்காய்வுப் பணிப்பாளர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

(ஊ) தொழில் ஆணையாளரின் வேண்டுகோளின்படி கம்பளை, அம்பாறை, முல்லைத்தீவு ஆகிய மூன்று புதிய ஊழியர் சேமநிதி வலயங்களை உருவாக்குவ தற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தற்போது கிடைக்கப்பெறும் தரவுகளின்படி நிதிய தொழிற்பாடுகளின் ஒப் பீட்டு அறிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.16

**ஊ. சே. நி. புள்ளி விபரங்கள் 1980 1981**

| விடயம் | | 1980 | 1981 |
|---|---|---|---|
| 1. பெறப்பட்ட உதவு தொகைகள் (ரூபா) | ... | 741,032,542* | 895,677,610* |
| 2. முதலீடுகள் (ரூபா) | ... | 1,022,500,194** | 1,123,971,335** |
| 3. முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் (ரூபா) | .. | 351,608,138 | 486,182,828 |
| 4. மீளளிப்புக் கொடுப்பனவுகள் (ரூபா) | .. | 205,355,353 | 300,358,744 |
| 5. மீளளிப்புக்களின் எண்ணிக்கை | ... | 50,968 | 61,969 |
| 6. வட்டி வீதம் % | ... | 8.0 | 8.5 |
| 7. உறுப்பினர் நிலுவைகள்மீதான வட்டி (ரூபா) | ... | 392,728,706 | 531,672,296 |

* கீழ்க் கொடுப்பனவு மேலதிகக் கொடுப்பனவு (உதவுதொகைக்) கணக்கின் வரவுவைக்கப்பட்ட உதவு தொகைகள் தவிர.

** அரச பிணைகளில் மீள முதலிடப்பட்ட முதிர்ச்சியின் தொகைகளையும் உள்ளடக்கும்.

**பணியாளகரம்**

பணியாளரகத் திணைக்களம் தொடர்ந்தும் பணியாளர்களைச் சேர்த்தல், பதவி உயர்த்தல், தொழில் செயற்பாடுகளைக் கணித்தல், ஒழுங்கு நடவடிக்கைகள் பணிப்பாளர் தொடர்பான விடயங்கள் ஆகியவற்றுடன் தொடர்பான விடயங் களை மேற்கொண்டு வருகின்றது,

**பணியாளர்களைச் சேர்த்தல்**

ஆண்டுக்காலத்தில் பின்வரும் புதிய பதவிகளுக்கு நியமனங்கள் வழங்கப் பட்டன.

1. பாதுகாப்புக்கட்டுப்பாட்டாளர் — உயர்பதவி வகுப்பு 3 (பாதுகாப்புச் சேவைக்குப் பொறுப் பாக இருப்பார்)
2. பத்திரிகையாளர் — பகுதிநேர ஒப்பந்த அடிப்படையில்

**தரவு செய்முறைபடுத்தல்**

தரவு செய்முறைப்படுத்தல் பிரிவு 1981 திசெம்பர்01 ஆம் நாளில் திணைக்களமாக தரமுயர்த்தப்பட்டது. தரவு செய்முறைப்படுத்தல் திணைக்களம்,முறை,நிகழ்ச்சித் திட்டம்; தொழிற்பாடுகள் என்ற பிரிவுகளாக அமைக்கப்பட்டுள்ளது.

1981 இல் திணைக்களம் மத்திய வங்கித் தொழிற்பாடுகளில் பலதுறைகளில் கணனிச் செய்முறையை மேற்கொண்டது. அவை முக்கியமாக.

அ. ஊழியர் சேமநிதிக் திணைக்களத்தின் கணக்கியல் முறை.
ஆ. இலங்கையின் சென்மதி நிலுவை.
இ. இலங்கைக்கான தனியாரின் பல்வகை உள்ளனுப்பல்களைப் பட்டியலிடுதல்.
ஈ. பொதுப்படுகடன் திணைக்களத்தின் உள்நாட்டு வெளிநாட்டுக் கடன்கள்.
உ. வங்கித்தொழில் திணைக்களத்தின் சிறிய, நடுத்தரக் காலக் கடன்கள்.
ஊ. இறக்குமதி முறை வழிநடத்தல்.
எ. புள்ளிவிபர திணைக்களத்தின் தரவு சேகரிப்பு அளவீடு.
ஏ. புள்ளிவிபரவியல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட நுகர்வோர் நிதி அளவீடு.

ஐ. புள்ளிவிபரவியல் திணைக்களத்தினுலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக் களத்தினுலும் காலத்திற்குக்காலம் மேற்கொள்ளப்பட்ட ஏனைய புள்ளி விபரவியல் அளவீடுகள்.

ஒ. மத்திய வங்கியின் சம்பளக் கொடுப்பனவும், ஓய்வூதியப்பணங்களும்

அத்துடன் திணைக்களம் தேசிய சேமிப்பு வங்கி, ஆட்பதிவு ஆணையாளர், அரச புகைவண்டித் திணைக்களம் ஆகியவற்றிற்கு நிகழ்ச்சித்திட்டப் பணிகளையும் கணனிப்படுத்தல் நேரத்தையும் வழங்கியது.

1981ஆம் ஆண்டுக்காலத்தில் வங்கியின் அரச கணக்குக்கிளையின் நடைமுறை களை கணனிப்படுத்துவதற்காக வடிவமைப்பு, செயற்படுத்தல் வேலைகளைத் திணைக் களம் பொறுப்பேற்றுக் கொண்டது. பன்னிரண்டு வகையான நாளாந்த அறிக் கைகளை தயாரிப்பதற்கு இம்முறை வடிவமைக்கப்பட்டது.

## பணிமனை

பணிமனைத்திணைக்களத்தின் கடமைகள் வங்கி அலுவலர்கள் வங்கிக்குள் வேலைசெய்வதற்கு மகிழ்ச்சியான சூழ்நிலையை உருவாக்குவதையும், பேணுவதை யும் அடிப்படையாகக்கொண்டது. இந்நோக்கத்தை அடைவதற்கு திணைக்களம் அதன் கடமைகளை குறிப்பாக நீர்வழங்கல், குளிரூட்டிகளை பராமரித்தல், மின் தூக்கிகளை பராமரிக்கும் சேவைகள் அவசர மின்வலு வழங்கல்கள், சுத்திகரித்தல், வங்கிப் பணிமனைகளைப் பராமரித்தலும், திருத்துதலும், தளபாடங்கள் பொருத் துக்களது திருத்தலும் பராமரித்தலும் போன்ற பணிகளை ஒழுங்காக செயற்படுத்தியது. இவ்வேலைகள் தவிர பணிமனைத்திணைக்களம் 1981 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்றிட்டங்களை நிறைவேற்றுவதிலும் ஈடுபட்டிருந்தது.

i. மாத்தறையில் பிரதேச அலுவலகம்.
ii. அனுராதபுரத்தில் பிரதேச அலுவலகம்.
iii. கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி.
vi. புதிய மத்திய வங்கி கட்டிடத்திட்டம்.
v. வங்கிக்கான மேலதிக தள இடங்களைப் பெறுதல்.
vi. வங்கியின் ஊர்தித் தொகுதிகளை முன்னேற்றலும் பராமரித்தலும்.

## தகவல்

தகவல் திணைக்களம் 1980 ஒகத்தில் ஏற்படுத்தப்பட்டது. இது,

i. சிறந்த நூலக சேவையைப் பேணித் தொழிற்படுத்துவதன்மூலம் பல்வேறு பட்ட வெளியீடுகள், சஞ்சிகைகள், புதினத்தாள்களிலிருந்து தேர்ந்து பிரித்தெடுத்த தகவல்களை வங்கிப் பணியாளர்கள் மற்றும் ஆர்வமுடை யோருக்கு வினியோகித்தல்.
ii. வங்கி வெளியீடுகளின் விற்பனை வினியோகத்தை மேற்கொள்ளல்.
iii. பத்திரிகை, வானொலிமூலம்பொதுமக்களுக்குச்செய்திகளை வழங்கல், மத்திய வங்கியினுல் காலத்திற்குக் காலம் ஆதரவளிக்கப்பட்ட மாநாடுகள், ஆய்வரங்குகள், தொழிற்கூடங்கள் முதலியவற்றின் ஒழுங்குகளை மேற் கொள்ளல்.

மீளாய்விற்குரிய ஆண்டில் மத்திய வங்கியால் பொறுப்பேற்கப்பட்ட வேலை களுக்கு விளம்பரம் அளித்தல், பத்திரிகை மாநாட்டை ஒழுங்குசெய்து செய்தி களை வழங்கல், பொதுமக்களுக்கும் பத்திரிகைகளுக்கும் தரவுகளையும் பின்னணி விடயங்களையும் வழங்கல் தொடர்பான வேலைகளை மேற்கொண்டது. இரண்டு பன்னுட்டு மாநாடுகள் 1981 சனவரியில் நடைபெற்ற தென்கிழக்காசிய ஆளுநர் களின் 16வது மாநாடு, 1981 மார்ச்சில் நடைபெற்ற ஆசியத்தீர்ப்பனவு ஒன்றியத் தின் 9வது சபைக்கூட்டம் ஆகியன 1981 ஆம் ஆண்டில் வங்கியினுல் விருந்தோம்பப்

பட்டதுடன் தேவையான ஒழுங்குகளையும் திணைக்களம் கவனித்தது. இவ்வாண்டில் திணைக்களம் கொழும்பிற்கு வெளியே ஒரு கருத்தரங்கை ஒழுங்கு செய்தது. மத்திய வங்கியால் நடாத்தப்பட்ட இவ்வாறான முதல் கருத்தரங்கு இதுவேயாகும். இந்தக் கருத்தரங்கு மொனராகலையில் நடத்தப்பட்டதுடன், தமது சொந்த வேளாண்மை, கைத்தொழில் செயற்றிட்டங்களின் முயற்சிகளுக்கு வங்கியின் உதவி தேவைப்பட்ட மக்களின் பிரிவிற்கும் வங்கியாளர்களுக்குமிடையில்நெருங்கிய இணைப்பை ஏற்படுத்தும் நோக்கத்தையும் கொண்டிருந்தது.

மாதாந்த செய்திக் கணிப்பு வெளியீடு, சட்டவறிஞர்கள், தனியார்துறையின் நிறைவேற்றுநர்கள், அரச அலுவலர்கள், மாணவர்கள் போன்ற பொருளியல் அலுவல்களில் ஆர்வமுள்ளவர்களிடையே மிகப் பிரபல்யம் உடையதாக காணப்பட்டது. இன்னொரு வெளியீடு கொடுகடன் செய்தித்திரட்டாகும். இச் செய்தித்திரட்டின் முதல் வெளியீடு வேளாண்மைக்கான கொடுகடன் வசதிகளை விபரித்தது.

## செயலகம்

இவ்வாண்டுக் காலத்தில் செயலகத் திணைக்களத்தினால் மத்திய வங்கியின் கைநூல் சம்பந்தமான பல்வேறு திருத்தங்கள் நாணயச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவற்றில் ஊழியர் சேமநிதிய விதிகள் சம்பந்தமான ஓர் திருத்தம் ஊழியர்களுக்கு பெரும் நன்மையளித்தது. வங்கியின் அனைத்து சட்ட வேலைகளையும் மேற்கொண்ட செயலகத்தின் சட்டப்பிரிவு வர்த்தக வங்கிகளுக்கு அனுமதிகள் வழங்கல், அத்தகைய வங்கிகளின் மூலதனத் தேவைகள் சம்பந்தமான விதிமுறைகளை உள்ளடக்கிய பொதுவான வங்கித் தொழில் நம்பிக்கை வியாபார சட்டத்தின் வரைவுகள் தொடர்பான வேலையிலும் ஈடுபட்டிருந்தது. வர்த்தக வங்கிகளின் பல்வேறு நோக்கங்களை ஒன்று திரட்டும் பொருட்டு வரையப்பட்ட இச்சட்டம், வங்கித்தொழில்முறை அவற்றின் தொழிற்பாடுகளை திறமையாகவும், பயனுறத்தக்கவகையிலும் நிறைவேற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1980 ஆம் ஆண்டின் எண் 46 கொண்ட ஊழியர் நம்பிக்கை நிதிய விதிமுறைகளுக்கு அமைய நடவடிக்கையும் எடுக்கப்பட்டது. இதன்படி தகைமை வாய்ந்த ஊழியர்கள் தொடர்பாக மொத்தச் சம்பளத்தில் 3 சதவீதத்தை 1981 மாச்சிலிருந்து ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு மத்திய வங்கி செலுத்தத் தொடங்கியது.

## முகாமைக் கணக்காய்வு

உள்ளக் கணக்காய்வு, முகாமைப் பணிகள் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கிய முகாமைக்கணக்காய்வுத்திணைக்களம் வங்கியிலுள்ள திணைக்களங்களின் கணக்கியல் தொழிற்பாடுகளை ஆய்வு செய்வதுடன், ஆளுநரின் வழி நடத்தலின் பேரில் ஒப்படைக்கப்பட்டமுறைகளையும் நடைமுறைகளையும் ஒழுங்காகப் பொறுப்பேற்று தொழிற்பாட்டு செயற்றிறனை மேம்படுத்துவது, வங்கித்திணைக்களங்களின் முறைகளையும் நடைமுறைகளையும் ஒழுங்குபடுத்துவது மனிதவலு தேவைப்பாடுகளை மீளாய்வு செய்வது ஆகியவற்றை பொறுப்பேற்றது.

## பிராந்திய அலுவலகம் மாத்தறை

இலங்கை மத்திய வங்கியின் முதலாவது பிராந்திய அலுவலகம் 1981 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 29 ஆம் நாள் மதிப்பார்ந்த நிதி, திட்டமிடல் அமைச்சரால் மாத்தறையில் கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது,

பிராந்திய அலுவலகத்தின் அதிகாரத்திற்குட்பட்ட பகுதி மாத்தறை, அம்பாந்தோட்டை, மொனறாகலை ஆகிய நிருவாக மாவட்டங்களை உள்ளடக்கும்.

பிராந்திய அலுவலகம் தனது தொழிற்பாடுகளை தொடங்கியதுடன் உடனடியாக மேற்கொண்ட பெரும் நடவடிக்கை மாத்தறை மாவட்டத்தில் 500 இளைஞர்களுக்குச்சுயவேலை வாய்ப்புத்திட்டத்தையும், கிராம பராமரிப்புத்திட்டத்தையும் நடைமுறைப்படுத்தியதாகும். வயது வந்தோர் வாக்குரிமை 50 வது ஆண்டுக் கொண்டாட்டங்களை நினைவூட்டும் பொருட்டு மாத்தறை மாவட்டத்தில் மத்திய வங்கியின் சுயவேலைத் திட்டம் அமைக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நிதி வசதிகளை வழங்குவதன் மூலம் அரச

வர்த்தக வங்கிகளின் (இலங்கை வங்கி, மக்கள் வங்கி) கிளைகள் கிராமங்கள் சுவீகரிக்கப்படுவதன் ஊடாக அபிவிருத்தியடையாத கிராமங்களில் முழுமையான அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்காக வங்கியால் இந்த ஏற்புத் திட்டம் உருவாக்கப் பட்டது

முன்னோடிச் செயற்றிட்டங்களாக மாத்தறை மாவட்டத்தின் றடம்பொல, உட எபரக்க ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

மேற்குறிப்பிடப்பட்ட திட்டங்கள் வேலையற்றோர் மத்தியில் சுயவேலைவாய்ப்பினை ஊக்குவிப்பதையும், உள்ளூரில்கிடைக்கக்கூடியமூலப்பொருட்களையும் தொழில் திறமைகளையும் உபயோகிக்கும், இலாபகரமான செயற்றிடங்களுக்கு வங்கி நிதி வசதிகளை வழங்குவதன்மூலம் அவற்றின் வருவாய் மட்டங்களை உயர்த்துவதனையே நோக்கமாகக் கொண்டுள்ளன. மாத்தறை மாவட்டத்தில் நடாத்தப்பட்ட தொடர்ச்சியான கருத்தரங்குகள், கூட்டங்கள் வாயிலாக அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் அரசியல் அதிகாரிகள், வங்கியாளர், அரச முகவர் நிலையங்கள் பொதுமக்கள்ஆகியோருக்கு இத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

மாத்தறை மாவட்டத்தில் சுயவேலைவாய்புத்திட்டம் கிராம பராமரிப்புத் திட்டம் ஆகியன அறிமுகப்படுத்தப்பட்டதுடன், வேலையற்றிருப்போர் இவ்விரு வர்த்தக வங்கிகளிடமிருந்து உதவி கோரிய பெரும் விண்ணப்பங்களை பிராந்திய அலுவலகம் பெற்றது. அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட திட்டங்கள் வேளாண்மை, பாற்பண்ணைத்தொழில், கோழிப்பண்ணைத்தொழில், ஆடுவளர்ப்பு, கடற்றொழில், இனிப்புத்தீன் பண்டங்கள், பீடிக்கைத்தொழில், கைத்தறிகள், தையல், தளபாடம், தாள் உற்பத்திகள், செங்கல்லும் ஓட்டுத்தயாரிப்பும், கல்லரைத்தல்தொழில், உலோக உற்பத்திகள், தும்பு உற்பத்திகள், திருத்துதல் பராமரித்தல் வேலைத்தலம் அமைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தன.

பிரதேச அலுவலகம் சாத்தியமான செயற்றிட்டத்திற்குரிய எடுத்துரைப்புக்களை தெரிவு செய்தது. 1981 யூன் / யூலை மாதங்களில் பங்குபற்றுநர்களுக்கு அவர்களினால் முறையே தெரிவு செய்யப்பட்ட முயற்சிகளில் ஒரு அடிப்படைப் பயிற்சியை அளிப்பதன் பொருட்டு ஒருநாள் பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தியது. நடாத்தப்பட்ட இந்த பயிற்சி நிகழ்ச்சிகளில் கோழிப்பண்ணை, பாற்பண்ணை, செங்கல் ஓடுகள் தயாரிப்புகள், மற்றும் தும்பு உற்பத்திகள் என்பவற்றை உள்ளடக்கும் வகுப்பறை பயிற்சிகளை வேண்டி நிற்காத பல்வேறுவகை பொருளாதார முயற்சிகளில் பெரும் தொகையான மக்களுக்கு வழிகாட்டும்பொருட்டு ஒரு தொடர்ச்சியான கருத்தரங்கும், குழுநிலை கலந்துரையாடல்களும் ஒழுங்கு செய்யப்பட்டன. இத்தகைய பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு வர்த்தக வங்கிகளும் அரச திணைக்களங்களும் முகவர் நிலையங்களும் பிரதேச அலுவலகத்திற்கு உதவி வழங்கின.

தற்பொழுது நடைமுறைப் படுத்தப்படும் இவ்விரு திட்டங்களின்படி குறிப்பிட்ட எந்த ஒரு திட்டத்தினதும் மொத்தச் செலவுத் தொகை ரூ. 6,000 தை விஞ்சக்கூடாது என்றும், இத்தொகையில் 10 சதவீதம் அல்லது ரூ. 600 கடனாளியினால் வழங்கப்படவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே எந்தவொரு செயற்றிட்டத்திற்கும் ஆகக்கூடிய வங்கி உதவி ரூ. 5, 400 ஆக இருக்கும். கடனாளிகளிடமிருந்து கடன் கொடுத்த வங்கியினால் ஆண்டிற்கு $12\frac{1}{2}$ சதவீத சலுகை அடிப்படையிலான வட்டி வீதம் அறவிடப்படுகின்றது. மத்தியவங்கியிலிருந்து கடன் வழங்கும்வங்கிக்கு ஆண்டிற்கு $8\frac{1}{2}$ சதவீதத்தில் மீள் நிதியிடல் அளிக்கப்படுகின்றது.

1981 திசெம்பர் முடிவில் பிரதேச அலுவலகம் சுயவேலை வாய்ப்புத்திட்டத்தின் கீழ் 263செயற்றிடங்களிலும் கிராம பராமரிப்புத்திட்டத்தின்கீழ் 27செயற்றிடங்களிலும் நிதியிடுவதற்கு இலங்கை வங்கிக்கும், மக்கள் வங்கிக்கும் விதந்துரைத்தது. இரண்டு திட்டங்களின் கீழும் விதந்துரைக்கப்பட்ட கடன் தொகைகளாவன முறையே ரூ. 985,955 ஆகவும் ரூ. 80, 096 ஆகவும் இருந்தன.

பின்வரும் அட்டவணை இரண்டு திட்டங்களின் கீழும் வங்கி ரீதியாகவும், துறை ரீதியாகவும் விதந்துரைக்கப்பட்ட கடன்களின் பகுப்பாய்வுகளைக் காட்டுகின்றது.

அட்டவணை 2.17

**சுயவேலைவாய்ப்பு, கிராம ஏற்புத் திட்டங்களின் கீழ் பிரதேச அலுவலகத்தினால் விதந்துரைக்கப்பட்ட கடன்கள்**

**இலங்கை வங்கி**

| துறை | சு. வே. தி. கடன்களின் எண்ணிக்கை | சு. வே. தி. தொகை ரூபா | கி. ஏ. திட்டம் (நடம்பொலாவும் உடஎபறெக்காவும்) கடன்களின் எண்ணிக்கை | கி. ஏ. திட்டம் (நடம்பொலாவும் உடஎபறெக்காவும்) தொகை ரூபா |
|---|---|---|---|---|
| 1. வேளாண்மை ... | 1 | 5,000 | 2 | 3,000 |
| 2. பாற்பண்ணை ... | 11 | 44,200 | 2 | 10,800 |
| 3. கோழிப்பண்ணை ... | 2 | 10,400 | 1 | 2,900 |
| 4. கடற்றொழில் ... | 3 | 13,450 | — | — |
| 5. இனிப்புப்பண்டங்கள் ... | 6 | 26,720 | 2 | 7,120 |
| 6. பீடி தயாரிப்பு ... | 5 | 22,890 | — | — |
| 7. கைத்தறி ... | 1 | 3,000 | 4 | 12,500 |
| 8. தையல் ... | 9 | 37,180 | — | — |
| 9. தச்சுவேலை ... | 2 | 4,250 | — | — |
| 10. தாள் உற்பத்திகள் ... | 3 | 13,490 | — | — |
| 11. செங்கற்களும் ஓடுகளும் ... | 23 | 96,530 | 4 | 16,575 |
| 12. கல் அரைத்தல் ... | 1 | 3,000 | 1 | 1,471 |
| 13. கயிற்று உற்பத்திகள் ... | 6 | 18,340 | 4 | 6,610 |
| 14. திருத்தல்களும் பேணலும் ... | 3 | 12,845 | — | — |
| 15. ஏனையவை ... | 8 | 30,330 | — | — |
| துணைத்தொகை | 84 | 341,625 | 20 | 60,976 |

**மக்கள் வங்கி**

| துறை | சு. வே. தி. கடன்களின் எண்ணிக்கை | சு. வே. தி. தொகை ரூ. | கி. ஏ. திட்டம் (நடம்பொலாவும் உடஎபறெக்காவும்) கடன்களின் எண்ணிக்கை | கி. ஏ. திட்டம் (நடம்பொலாவும் உடஎபறெக்காவும்) தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. வேளாண்மை ... | 7 | 16,565 | — | — |
| 2. பாற்பண்ணை | 16 | 59,200 | — | — |
| 3. கோழிப்பண்ணை ... | 7 | 34.450 | — | — |
| 4. ஆட்டுப்பண்ணை ... | 2 | 4,250 | — | — |
| 5. இனிப்புப் பண்டங்கள் போன்றவை ... | 14 | 56,115 | — | — |
| 6. பீடித்தயாரிப்பு ... | 1 | 4,185 | — | — |
| 7. கைத்தறி ... | 3 | 9,550 | — | — |
| 8. தையல் ... | 18 | 58,685 | — | — |
| 9. தச்சுவேலை ... | 19 | 53,520 | — | — |
| 10 செங்கற்களும் ஓடும் ... | 53 | 214,615 | 1 | 2,000 |
| 11. கல் அரைத்தலும் உற்பத்திகளும் ... | 8 | 32,440 | 1 | 4,000 |
| 12. கயிற்று உற்பத்தி ... | 11 | 23,425 | 3 | 5,600 |
| 13. திருத்தல்களும் பேணலும் | 9 | 38,480 | — | — |
| 14. தாள் உற்பத்திகள் | — | — | 1 | 5,400 |
| 15. ஏனையவை ... | 11 | 38.850 | 1 | 2,120 |
| துணைத் தொகை | 179 | 644,330 | 7 | 19,120 |
| கூட்டு மொத்தம் ... | 263 | 985,955 | 27 | 80,096 |

பின்வரும் அட்டவணை 1981 ஆம் ஆண்டு திசெம்பர் முடிவில் இலங்கை வங்கியாலும், மக்கள் வங்கியாலும் இரு திட்டங்களிலும் ஒப்புதல் அளிக்கப்பட்ட கடன்களின் எண் தொகையையும் கூட்டு மொத்தத்தையும் காட்டுகின்றது.

அட்டவணை 2. 18

**சு.வே. வளர்ப்பு கி.ஏ .திட்டங்களின் கீழ் வர்த்தக வங்கிகளால் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்கள்**

| திட்டம் | இலங்கை வங்கி | | மக்கள் வங்கி | |
|---|---|---|---|---|
| | கடன்களின் எண்ணிக்கை | தொகை ரூபா | கடன்களின் எண்ணிக்கை | தொகை ரூபா |
| சு, வே. வா. திட்டம் ... | 14 | 60,535 | 16 | 58,255 |
| கி. ஏ. திட்டம் (நடம்பொலவும் உட ஒபறெக்கவும்) .. | 5 | 9,500 | 3 | 6,370 |
| மொத்தம் .. | 19 | 70,035 | 19 | 64,625 |

மொனராகலை மாவட்டத்திற்கும் இத்திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பிரதேச அலுவலகம் மேற்கொண்டிருக்கிறது.

**பிரதேச அலுவலகத்தின் மரபு ரீதியான மத்திய வங்கித் தொழிற்பாடுகள்**

மாத்தறை மாவட்டத்தில் காசோலைகளின் விரைவான தீர்ப்பனவுகளுக்கு வசதி அளிக்கும் பொருட்டு 1981 ஆம் ஆண்டு யூன் 15 ஆம் நாள் முதல் ஒரு பிரதேசத் தீர்ப்பனவு ஒன்றியம் தமது தொழிற்பாடுகளை ஆரம்பித்தது. தற்பொழுது இரண்டு தீர்ப்பனவுகள் நடைபெறுகின்றன. முதலாவது தீர்ப்பனவு 11. 30 மணிக்கும், இணக்கத் தீர்ப்பனவுகள் மறுதினம் 08. 30 மணிக்கும் இடம்பெறுகின்றன.

பிரதேச தீர்ப்பனவு ஒன்றியத்தில் பங்குபற்றும் வங்கிகள் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி என்பனவாகும்.

## ஆளணி

ஆளுநர் முனைவர் டபிள்யூ. இராசபுத்திரம் 1981 ஆம் ஆண்டுக் காலத்தில் பின்வரும் மாநாடுகளிலும் கூட்டங்களிலும், ஆய்வரங்குகளிலும் கலந்து கொண்டார்.

அ. இலிப்பிறவில்லியில் (கபேன்) நடைபெற்ற (மே 11 ஆம் நாளிலிருந்து 24 ஆம் நாள்வரை) பன்னாட்டு நாணய நிதியம் புத்தாக்க அபிவிருத்திக்கான பன்னாட்டு வங்கி ஆகியவற்றின் இடைக்காலக்குழு, இணைந்த அபிவிருத்திக் குழு ஆகியவற்றின் கூட்டங்கள்.

ஆ. இலண்டனில் பொது நலவமைப்பு நாடுகளின் மத்திய வங்கி ஆளுநர்களின் ஆண்டுப் பொதுக்கூட்டம், பேசில் பன்னாட்டுத்தீர்ப்பனவுக்கான வங்கியின் ஆண்டுப் பொதுக்கூட்டம், அதனைத்தொடர்ந்து கைரோவிலுள்ள எகிப்து மத்திய வங்கி, அபுதாபியில் ஐக்கிய அரபு எமிறேற்ஸ் மத்திய வங்கியின் அலுவல்சார்ந்த கலந்துரையாடல்கள் (யூன் 9-25 ஆம் நாள்வரை)

இ. சிட்னியில் நடைபெற்ற முதலீட்டு ஊக்குவிப்பு ஆய்வரங்குகள் பாங்கொக் மனிலா ஆகிய இடங்களில் நடைபெற்ற அலுவல்சார் கலந்துரையாடல்கள் (ஓகத்து 27 ஆம் நாள் - செத்தெம்பர் 10 ஆம் நாள்வரை)

ஈ. வாசிங்டனில் நடைபெற்ற பன்னாட்டு நாணய நிதியம் புத்தாக்க அபிவிருத்திக்கான பன்னாட்டு வங்கி ஆகியவற்றின் ஆண்டுப் பொதுக்கூட்டங்கள் (செத்தெம்பர் 19 - ஒற்றோபர் 9 ஆம் நாள்வரை)

உ. சிங்கப்பூரில் நடைபெற்ற தென்கிழக்காசியா நியூசிலாந்து அவுத்திரேலியா ஆகிய நாடுகளின் ஆளுநர்சபையின் பதினான்காவது கூட்டம் பேஜிங்கில் நடைபெற்ற அலுவல்சார் (நவெம்பர் 17-30 ஆம் நாள்வரை) கலந்துரையாடல்

மூத்த துணை ஆளுநர் முனைவர் எச். என். எஸ். கருணாதிலக, ஆளுநர் நாட்டிலில்லாது வெளிநாட்டில் இருந்த வேளையில் வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலராகவும் நாணயச்சபையின் தலைவராகவும் கடமையாற்றினார்.

துணை ஆளுநர் திரு. க. கனகசபாபதி, ஆளுநரும், முனைவர் எச். என். எஸ். கருணாதிலகாவும் நாட்டிலில்லாது வெளிநாட்டில் இருந்த காலத்தில் மூத்த துணை ஆளுநராக இருந்து 1981 நவெம்பர் 17 ஆம் நாள் முதல் 30 ஆம் நாள் வரை வங்கியின் முதன்மை நிறைவேற்றுநராகத் தொழிற்பட்டார்.

திறைசேரியின் துணைச் செயலாளர் திரு. சி. பி. சண்முகம் நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர் நாட்டிலில்லாது வெளிநாட்டில் இருந்த வேளைகளில் அவருக்குப் பதிலாக நாணயச் சபையின் அலுவல்சார் உறுப்பினராகக் கடமையாற்றினார்.

திரு. ஏ. எஸ். ஜயவர்த்தன ஆளுநரின் உதவியாளருக்கான அவரின் கடமைகளுடன் 1980 யூன் 8 ஆம் நாளிலிருந்து 1981 ஓகத்து 8 ஆம் நாள்வரை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களப் பணிப்பாளராகவும் தொழிற்பட்டார்.

**நியமனங்கள்**

பன்னாட்டு நாணய நிதியத்தின் வங்காள தேசம், இந்தியா, இலங்கைக்கான பதில் நிறைவேற்று பணிப்பாளராக விடுவிக்கப்பட்டிருந்த ஆளுநரின் உதவியாளர் திரு. டி. எல். கன்னங்கரா 1981 திசெம்பர் 1 ஆம் நாளிலிருந்து துணை ஆளுநராக நியமிக்கப்பட்டு மத்திய வங்கியில் மீண்டும் கடமையேற்றார்.

புள்ளிவிபரவியல் திணைக்களப்பணிப்பாளர் முனைவர் கே. எஸ். ஈ. ஜயதிலக 1981 யூன் 1 ஆம் நாளில் நிருவாகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

ஐக்கிய இராச்சியத்தில் பயிற்சியின் பொருட்டு சிறப்பு விடுப்பில் இருந்த திரு. எஸ். டபிள்யூ. பி. அமரசூரியா மத்திய வங்கியில் மீண்டும் கடமையேற்றதுடன் 1981 யூன் 1 ஆம் நாளிலிருந்து வங்கி அபிவிருத்திப் பயிற்சியின் மதியுரையாளராக நியமிக்கப்பட்டார்.

காம்பியாமத்தியவங்கியில்கடமையைஏற்றுக்கொள்வதற்காகபன்னாட்டுநாணய நிதியத்திற்கு விடுவிக்கப்பட்ட துணை மேலதிக முதன்மைக் கணக்காளர் திரு. எச். பிரேமரத்தின 1981 பெப்புருவரி 25 ஆம் நாள் மத்திய வங்கியில் கடமைக்கு மீண்டார். அவர் 1981 மே 1 ஆம் நாளிலிருந்து முதன்மைக் கணக்காளராக நியமிக்கப்பட்டார்.

பணிமனைத்திணைக்களப்பணிப்பாளர் திரு.எஸ்.பி. விக்கிரமரத்தின 1981சனவரி 1 ஆம் நாளிலிருந்து நாணயத் திணைக்களப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

கிராமியக் கொடுகடன் அபிவிருத்தி நிதிப் பணிப்பாளர் திரு. எஸ். ஈஸ்பர தாசன் 1981 யூன் 8 ஆம் நாளிலிருந்து முழுநேர அடிப்படையில் நிதி திட்டமிடல் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டார். அவர் 1981 ஒகத்து 8 ஆம் நாள் மத்திய வங்கியின் கடமைக்கு மீண்டதுடன் அத்திகதியிலிருந்து பொருளாதார ஆராய்ச்சித் திணைக் களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

பணியாளாகப் பணிப்பாளர் திரு. டி. கே. ஜயவர்த்தன 1981 திசெம்பர் முதலாம் நாளிலிருந்து ஊழியர் சேமநிதித் திணைக்களக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

திரு. பி.எம். நாகாவத்தை 1981சனவரி 1ஆம் நாளிலிருந்து பனிமனைத்திணைக் களப் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

திரு. என். ஏ. தர்மபந்து 1981 ஒகத்து 1 ஆம் நாளிலிருந்து பதில் மேலதிக முதன்மைக் கணக்காளராக நியமிக்கப்பட்டார்.

1981 யூன் 8 ஆம் நாளிலிருந்து கிராமியக் கொடுகடன் அபிவிருத்தி நிதியின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்த திரு. ஜி.எம்.பி. த சில்வா 1981 திசெம்பர் 1 ஆம் நாளிலிருந்து கிராமியக் கொடுகடன் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக 1981 ஒகத்து 1 ஆம் நாளிலிருந்து நியமிக்கப்பட்ட திரு. எச். எம். ஆர். எல்லபொல 1981 திசெம்பர் 1 ஆம் நாளிலிருந்து அபிவிருத்தி நிதியின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

திரு. பி.அமரசிங்க 1981 யூன் 8 ஆம் நாளிலிருந்து பொதுப்படுகடன் திணைக் களத்தின் பதில் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

ஊழியர் சேமநிதித்திணைக்களத்தின் கண்காணிப்பாளரும் தரவு செய்முறைப் படுத்தல் பிரிவின் முகாமையாளருமான திரு. வி.என். டி. நாணயக்காரா 1981 திசெம்பர் 1 ஆம் நாளிலிருந்து தரவு செய்முறைப்படுத்தல் திணைக்களத்தின் முகாமையாளராக நியமிக்கப்பட்டார்.

முனைவர் ஜி. எம். அபேரத்தின 1981 ஒகத்து 1ஆம் நாளிலிருந்து கிராமிய வங்கித்தொழில், அலுவலர் பயிற்சிக் கல்லூரியின் பதில்பணிப்பாளராக நியமிக்கப் பட்டார்.

திரு. பி. எவ். ஜே. சில்வா 1981 திசெம்பர் 1 ஆம் நாளிலிருந்து பணிப்பாள ரகத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

**ஓய்வுபெற்றோர்**

திரு. டி. ஆர். சிறிவர்த்தன ஆளுநரின் உதவியாளர் *1981* யூலை *29* ஆம் நாள் தொடக்கம் வங்கிச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

திரு. என். கதிர்காமத்தம்பி சிறப்பு மதியுரையாளர் *1981* சனவரி *4* ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

உணவு ஆணையாளராகக்கடமையாற்றும் பொருட்டு உணவு கூட்டுறவு அமைச்சுக்கு விடுவிக்கப்பட்ட திரு. பி.எம். அசன் 1981 மே 1ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்,

**விடுவிப்பில் உள்ள அலுவலர்கள் (1981 திசெம்பர் 31 ஆம் நாளில் உள்ளபடி)**

பின்வரும் வங்கி அலுவலர்கள் இலங்கையின் அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் பன்னாட்டு நாணய நிதியம் ஆகியவற்றில் கடமை ஆற்றுவதற்காக விடுவிக்கப்பட்டார்கள்.

திரு. ரி. ஜி. புஞ்சி அப்புகாமி ஆளுநரின் உதவியாளர் தொடர்ந்தும் *1981* ஒற்றோபர் *31* ஆம் நாள்வரை இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்திற்குப்பகுதி நேர அடிப்படையில் விடுவிக்கப்பட்டார்.

திரு. வி. கே. விக்கிரமசிங்க தேசிய அபிவிருத்தி வங்கியின் பொதுமுகாமையாளராக கடமையாற்றுவதற்காக நிதிதிட்டமிடல் அமைச்சிற்கு,

ஆளுநரின் உதவியாளர் திரு. ஏ.எஸ். ஜயவர்த்தன, வங்காளதேசம், இந்தியா, இலங்கைக்கான பதில் நிறைவேற்றுப் பணிப்பாளராக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு,

திரு. வி. எஸ். சுப்பிரமணியம் சொலமன் தீவுகளின் நாணய மேலாண்மைச் சபையில் கடமையாற்றுவதற்காக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு,

முதன்மைக்கணக்காளர் திரு. யூ. ஏ. த சில்வா கம்பியா மத்திய வங்கியில் கடமையேற்பதற்காக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு,

முனைவர் கே. எஸ். ஈ. ஜயதிலகா ஓமான் மத்திய வங்கியில் மதியுரையாளராக கடமையாற்றுவதற்காக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு,

முனைவர் எஸ். ரி. ஜி. பர்னாந்து மக்கள் வங்கியின் தலைவராக தொழிலாற்றுவதற்காக நிதி திட்டமிடல் அமைச்சிற்கு,

திரு. ஆர். எம். தென்னக்கூன், வரையறுக்கப்பட்ட தோட்ட உற்பத்திகளின் தலைவராகக் கடமையாற்றுவதற்காக பெருந்தோட்டக்கைத்தொழில்கள் அமைச்சிற்கு,

திரு. எஸ். இராசலிங்கம் திறைசேரியின் நாணயக் கொள்கைப் பணிப்பாளராகக் கடமையாற்றும்பொருட்டு நிதி திட்டமிடல் அமைச்சிற்கு,

முனைவர் எல். ஈ. என். பர்ஞந்து திறைசேரியின் பொருளாதார அலுவல்கள் மேலதிகப் பணிப்பாளராகக் கடமையாற்றும் பொருட்டு நிதி திட்டமிடல் அமைச்சிற்கு,

முனைவர் ஜி. டபிள்யூ. பி. விக்கிரமசிங்கா இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் முகாமைப் பணிப்பாளராகவும் கடமையாற்றும் பொருட்டு வர்த்தகக் கப்பற்றுறை அமைச்சிற்கு,

திரு. ஏ. ஏ. டி. ஜஸ்டின் டயர் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் கைத்தொழில் அறிவியல் அலுவல்கள் அமைச்சின் செயலாளராயும் கடமை யாற்றும்பொருட்டு கைத்தொழில் அறிவியல் அலுவல்கள் அமைச்சிற்கு,

திரு. சி. ஈ. ஜயசூரியா இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு,

முனைவர் ஏ. சி. இறந்தெனி, திருவாளர்கள்: எம். பி. திசாநாயக்கா, ஜி. ஏ. வி. பொன்சேகா ஆகியோர் நிதி திட்டமிடல் அமைச்சிற்கு,

திருவாளர்கள்: டீ. ஜே. எம். மீகொட, ஏ. ஏ. ஆர். திசாநாயக்கா ஆகியோர் இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கியில் கடமையாற்றுவதற்காக நிதி திட்டமிடல் அமைச்சிற்கு,

விடுவிக்கப்பட்டார்கள்.